


# 2016

# வருடாந்த அறிக்கை

CEYLON PETROLEUM STORAGE TERMINALS LIMITED

## சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிட்ட்


தொகைசாலை கேகே.எஸ்.
தொகைசாலை அனுராதபுரம்.
தொகைசாலை மட்டக்களப்பு.
தொகைசாலை குருணாகலை.
தொகைசாலை பேராதெனிய.
தொகைசாலை சரசவிஉயன.
பிரதான களஞ்சிய முனையம் முத்துராஜவெல.
தொகைசாலை பதுளை.
தொகைசாலை கொட்டகலை.
பிரதான களஞ்சிய முனையம் கொலன்னாவ.
தொகைசாலை ஹப்புத்தளை.
தொகைசாலை காலி.
தொகைசாலை மாத்தறை.

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | எம்மைப் பற்றி | 2 |
| 2. | நோக்கும் பணியும் | 3 |
| 3. | தலைவரின் செய்தி | 6 |
| 4. | பணிப்பாளர் சபை | 7 |
| 5. | முகாமைத்துவ அணி | 12 |
| 6. | நிறுவனம் பற்றிய தகவல்கள் | 16 |
| 7. | முகாமைத்துவ கலந்தாய்வும் பகுப்பாய்வும் | 18 |
| 8. | பிரதான செயற்திட்டங்கள் | 25 |
| 9. | இடர் முகாமைத்துவம் | 27 |
| 10. | சமூக பொறுப்புடைமை | 30 |
| 11. | நிறுவன ஆளுகை | 32 |
| 12. | கம்பனியின் விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை | 36 |
| 13. | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 38 |
| 14. | விருதுகளும் பாராட்டுக்களும் | 40 |
| 15. | நிதியியல் தகவல்கள் | 44 |
| | - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | |
| | - நிதியியல் நிலைக் கூற்று | |
| | - அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | |
| | - பங்குரிமை மாற்றங்கள் கூற்று | |
| | - காசுப்பாச்சல்கள் கூற்று | |
| | - முக்கிய கணக்கிட்டுக் கொள்கைகள் | |
| | - நிதியியல் கூற்றுக்கான கொள்கைகள் | |
| 16. | ஐந்து ஆண்டுகளுக்கான தொகுப்பு | 80 |

## உற்பத்தி வாரியான தொகுப்பு



# எம்மைப் பற்றி

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் (சிபெஸ்ரேலி) நிறுவனமானது 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தினை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் பிரிவு 2 (1) ஆம் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனி யொன்றாவதுடன் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டு 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 1310/8 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகிவற்றை உள்ளடக்குகின்றது.

இலங்கையில் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளின் கையாளுகையினை நாம் முகாமை செய்வதற்கான அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில் துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோர்களினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவு செய்வதற்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான நாடுமுழுவதும் சுமார் ஆயிரம் சில்லறை விநியோக நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம். கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகளில் சுமார் 3000 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ள 11 மொத்தச் சாலைகள் மூலம் துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

**பிரதான முனையங்கள்**

கொலன்னாவை நிலையம்

முத்துராஜவெல முனையம்

**மொத்த சாலைகள்**

அனுராதபுரம்
பதுளை
மட்டக்களப்பு
காலி
ஹப்புத்தளை
காங்கேசன்துறை
கொடகல
குருநாகல்
மாத்தறை
பேராதனை
சரசவி உயன

கொலன்னாவ நிலையமானது 12 பெற்றோலிய உற்பத்திகளை கையாளுகின்ற அதேவளை முத்துராஜவெல நிலையம் 5 பெற்றோலிய உற்பத்திகளை கையாள கின்றது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விநியோகத் தொழிற்பாடானது இரண்டு சந்தைப்படுத்தும் கம்பனிகளான இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய ஒயில் கம்பனி இரண்டின் சார்பிலும் உற்பத்திகளை விநியோகிப்பதனை பொறுப்பேற்கின்றது.

கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன. நாடுபூராகவும் பெற்றோலிய உற்பத்தி விநியோகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் 11 வெளிப்பிரதேச மொத்தச் சாலைகளையும் ஒரு உள்நாட்டு புகையிரத ஓரச்சாலையினையும் தொழிற்படுத்துகிறது.

இவ்வமைவிடங்களுக்கும் உள்நாட்டு புகையிரத ஓரச்சாலைக்கும் உற்பத்திகளின் நிறைவாக்கம் கொலன்னாவை விநியோக நிலையத்தில் ஏற்றப்படும் புகையிரதக் கொள்கலன்கள் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் அத்துடன் பிரதான முனையங்களில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட வீதித்தாங்கிகள் என்பவற்றை பயன்படுத்தி வீதி மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. விமான எரிபொருட்கள் கொலன்னாவை நிலையத்தில் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டு புகையிரதம் மூலம் நாளாந்த அடிப்படையில் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. இரத்மலானை மற்றும் இலங்கை விமானப்படையினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏனைய விமானக் களங்களுக்காக வீதி மூலம் எரிபொருள் வசதி அளிக்கப்படுகின்றது. குறைந்த முத்துராஜவெல முனையங்களில் கந்தக உலை எண்ணெய் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையமான ஒரேயொரு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட குழாய் இணைப்பு ஊடாக அனுப்பப்படுகின்றது. கொலன்னாவை நிலையம் சுத்திகரிப்புச் சாலையில் இருந்தும் கொழும்புத் துறைமுகத்தின் டொல்பின் இறங்கு துறையில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட தாங்கிகளில் இறக்கப்படுகின்ற உற்பத்திகளை பெற்றுக்கொள்கின்றது. முத்துராஜவெல முனையமனது கெரவெலபிட்டிய கரைக்கு சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் அமையப்பெற்றுள்ள தனி நிலை நங்கூர மிதவையூடாக இறக்கப்படும் இறக்குமதி செய்யப்பட கப்பல் சரக்கில் இருந்து மாத்திரம் பெற்றுக்கொள்கின்றது.



# நோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன்மிக்க பெற்றோலிய முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்




# பணி

அக்கறைதாரர்களின் எதிர்பார்கைகளை நிறைவு செய்கின்ற மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மட்டத்தினை உணர்ந்துகொள்ளத்தக்க அத்துடன் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கு அர்பணித்துள்ள அதேவேளை முனைய வசதி பயன்பாட்டளர்களுக்கு / வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினை பாதுகாத்தல், மிகச்சரியான தரத்தினை உறுதி செய்தல், நுகர்வோரினதும் பொதுமக்களினதும் பின்னூட்டல் மூலம் வழிநடாத்தப்படும் விசுவாசமிக்க, பாடுபடுகின்ற சிறப்பாக பயிற்றப்பட்டதொழிற்படையின் அர்ப்பணிப்புமிக்க பங்கேற்பின் ஊடாக ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்புக்கான செயற்பாட்டில்லுள்ள நியமங்களுக்கு கௌரவமளித்து நாட்டில் மிகவும் வினைத்திறன் மிக்க முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்.







| முக்கிய நிதியியல் சிறப்புக்கூறுகள் | 2016 | 2015 | அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வருவாய் | 12,663,445 | 11,687,263 | 976,182 |
| மொத்த இலாபம் | 6,001,755 | 5,271,850 | 729,905 |
| வரிக்கு முந்திய இலாபம் | 2,330,073 | 1,715,646 | 614,427 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 1,738,629 | 1,373,984 | 364,646 |
| நடைமுறைச் சொத்துகள் | 10,809,703 | 10,174,620 | 635,083 |
| மொத்த சொத்துகள் | 28,058,891 | 27,269,765 | 789,126 |
| நடைமுறை பொறுப்பு | 2,057,201 | 2,487,082 | (429,881) |
| **முக்கிய நிதியியல் விகிதங்கள்** | | | |
| தொழிற்படுத்தல் இலாப விகிதம் % | 47 | 45 | 2 |
| தொழிற்படுத்தல் இலாப விகிதம் % | 18 | 15 | 4 |
| தேறிய இலாப விகிதம் % | 14 | 12 | 2 |
| ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் மீதான வருவாய் % | 8 | 6 | 1 |
| திரவத் தன்மை விகிதம் | 5 | 4 | 1 |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்து | 30 | 29 | 2 |








## தலைவரின் செய்தி

2016 நிதியாண்டின் போது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்டின் முன்னேற்றம் பற்றி இச்செய்தியினை பணிப்பாளர் சபை சார்பில் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நாட்டின் பெற்றோலிய உற்பத்திகளை கையாளும் முன்னணி கம்பனியாக நுகர்வோருக்கு பெற்றோலிய உற்பத்திகளை கிடைக்கச் செய்கின்ற அதேவேளை முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கு / நுகர்வோருக்கு வழங்கப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் மிகச்சரியான தரநிர்ணயித்தினை உறுதிசெய்கின்ற, விசுவாசமிக்க, ஆர்வமிக்க மற்றும் சிறப்பாக பயிற்றப்பட்ட தொழிற்படையின் அர்பணிபுமிக்க பங்களிப்பின் ஊடாக ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தரநியமங்களுக்கு மதிப்பளித்தல் எமது பொறுப்புடமையாகும். எமது ஊழியர்களை பாதுகாக்கின்ற, சுற்றாடலை பேணுகின்ற மற்றும் நாட்டின் பொருளாதரத்தை வலுப்படுத்துகின்ற விதம் ஒன்றில் எமது வியாபரத்தை கொண்டு நடாத்துவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமது ஒட்டுமொத்த உபாயமானது நீண்டகால பெறுமதியினை தோற்று விக்கின்ற அதேவேளை எமது மூலதனச் செலவினத்திற்கு நன்கு அதிகமாக இலாபங்களை பெற்றுக் கொள்ளும் செயற்திட்டங்களில் முதலிடுவதாகும். உயர்தர சொத்துகளின் வகை யொன்றினூடாக நாம் அடைகின்ற பெறுமதி சேர்க்கப்பட்ட வளர்ச்சி மீது நாம் கவனம் செலுத்தியுள்ள அதேவேளை தொழிற்பாட்டு உன்னதத்தினையும் நிதியியல் ஒழுக்கக்கத்திற்கான கடமைப்பொறுப்பினையும் நாம் பேணுகின்றோம்.

எமது இலக்குகளை அடைவதற்கு செயல் திறன்மிக்கவாறு எம்மை இயங்கச் செய்கின்ற 3000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை கொண்ட எமது ஆற்றல்மிக்க தொழிற்படை மூலம் இவை அனைத்தும் சாத்தியமாக்கப்பட்டுள்ளன. கம்பனியொன்றாக, அதன் இரண்டு சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்கும் சேவை வழங்குநராக எமது ஆர்வலர்கள் உச்சமட்ட சேவையினைப் பெறுகின்றனர் என்பதனை உறுதி செய்வதற்கு நாம் கடினமாக உழைக்கின்றோம்.

எமது அர்ப்பணிப்பினை மீள் உறுதிப்படுத்தி இந்நிதியாண்டு முழுவதும் பல எண்ணிக்கையிலான கௌரவிப்பு பாராட்டுகளுடன் அங்கிகரீக்கப்பட்டுள்ளோம். அதாவது **சீ.என்.சீ.ஐ. தொழிற்துறை உன்னதத்திற்காக விருதுகள் வைபவத்தில் வெண்கல விருது மற்றும் சமூக கலந்துரையாடல் அத்துடன் பணியிட கூட்டுறவுக்கான வெண்கல விருது என்பனவாகும்**.

மேலும், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்டானது உள்ளக மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு தொழிற்பாடு இரண்டினதும் தொடர்ச்சியான மீளாய்வின் கீழ் பொறுப்புக்கூறலின் முறையான நிறைவேற்றுவதுடன் கூடிய சிறந்த ஆளுமைக் கோட்பாட்டுகளுக்கு அர்ப்பணித்துள்ளதுடன் எமது சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்ட முகாமைத்துவமானது உயர்தகமை பெற்ற ஆளணியினைக் கொண்டுள்ளது.
ஆண்டின்போது தேசத்திற்கான எமது சேவையினை மேம்படுத்துவதற்கு பொறுப்பேற்கப்பட்ட பிரதான செயல்த்திட்டங்கள், வீதி/ புகையிரதக் கடவைகளில் 12’ அங்குல விட்டம் கொண்ட குழாய்த் தொகுதிகளை பொருத்துதல், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் தரவு நிலையத்திற்கான அனர்த்த மீட்பு முகாமைத்துவம், அனுராதபுரத்தில் மொத்தச் சாலை அபிவிருத்தி, மாகல்லையில் மொத்த சாலை அபிவிருத்தி, கொலன்னாவ நிலையத்தில் உள்ளக வீதி வலையமைப்பு முறைமை மேம்படுத்தல், கொலன்னாவ எண்ணெய் நிலையத்தில் 1-4 ஆம் வலயத்தில் மண்மேட்டு பாதுகாப்பு மற்றும் கொலன்னாவ நிலையத்தில் 5 ஆம் இலக்கத் தாங்கி திருத்தப்பணிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.
சபை உறுப்பினர்கள், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் சிரேஷ்ட முகாமைத்துவம், அலுவர்கள், கணக்காய்வாளர்கள் அத்துடன் இவ்வறிக்கையினை தயாரிப்பதற்கு மிகவும் முயற்சித்த வேறுபலரினதும் பங்களிப்பின்றி கம்பனியின் ஆர்வலர்களுக்கு இவ்வறிக்கையினை கையளிக்க சாத்தியம் இருந்திருக்காது. அவ்வனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இறுதியாக 2016 இன் போது எமது நீண்டகால இலக்குகளை நிறைவேற்றுவதற்கு கம்பனி பிரதான முன்னோக்கிய நடவடிக்கை ஒன்றினை எடுத்துள்ளது என்று நான் உணர்வதுடன் இலாபம் ஈட்டுகின்ற அரசாங்க கூட்டுமுயற்சயொன்றாக நாம் தொடர்கின்ற அதேவேளை பொதுமக்களுக்கான எமது பொறுப்புகளை வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றுவோம்.



**டி.சி செஹான் செனவிரத்ன**

**தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளரும்**

# பணிப்பாளர் சபை



## திரு. டீ.சீ. செஹான் செனவிரத்ன

டி.சி. செஹான் செனவிரத்ன, 2015 ஒக்டோபர் 12 தொடக்கம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளராக சேவையாற்றி வருவதுடன் 2015 ஒக்டோபர் 12 முதல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் ஒவ்வொருவராகவும் சேவையாற்றுகின்றார்.

இலங்கையில் பாரிய நடைபாதைக் கற்கள் தயாரிப்பாளரான எஸ்.எம்.எஸ்.ஹோல்டிங் நிறுவனத்தை நிறுவி தலைவர்/ பணிப்பாளரானதன் மூலம் 2011 இல் தனது விடாமுயற்சியினை நிறுவியதுடன் அதனைத்தொடர்ந்து கிரீநெறி கப்பனி (பிரைவட்) லிமிடட், பிளக் டயமன்ட் செகுரூட்டி (பிரைவட்) லிமிடட், எஸ்.எம்.எஸ். பிலான்டேசன் (பிரைவட்) லிமிடட், மற்றும் எஸ்.எம்.எஸ். ரியாலிட்டி பிரைவட் லிமிடட் என்பவற்றினை நிறுவி முகாமைத்துவ பணிப்பளரானதுடன் நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்காக பங்களிப்புச் செய்த அவரது தொடர்ச்சியான முயற்சிகள் அதேபோன்று வியாபர நிபுணத்துவ பண்புகள் மற்றும் திறன்கள் அறிவு ஆகியவற்றினை அங்கீகரித்து பல கௌரமிக்க விருதுகளுடன் உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் முன்னணி வரத்தக தலைவர்களின் ஒருவராவார்.

2010 இல் ஆண்டுக்கான இலங்கையின் தொழில்முயற்சியாளராக கௌரவிக்கப்பட்டதுடன் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஆசிய பசுபிக் தொழில் முயற்சியாளர் விருதுகளில் உன்னத வாய்ப்புமிக்க தொழில் முயற்சியாளர் விருதுகளையும் தேசிய மற்றும் மாகாண விருதுகளையும் பெற்றதுடன் அதேபோன்று தர ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட ஒஸ்ரியாவின் வியன்னாவில் இடம்பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் "தரம் 2015 இல் உன்னதத்திற்கான சர்வதேச வைர பரிசில்" வழங்கப்பட்டது. இங்கு அவர் அதன் வருடாந்த அங்கீகரித்தல் நிகழ்ச்சி திட்டத்தில் "தர விருது" இனை பெற்றுக்கொண்டார்.

இவர் உற்பத்தியில் டிப்ளோமாவையும், வியாபார முகாமைத்துவத்தில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.



## திரு. டி. ஜி. ஜயசிங்க

திரு டி. ஜி. ஜயசிங்க, இலங்கைத் திட்டமிடல் சேவை வகுப்பு 1 அலுவலலொருவரும் 2007 சனவரியில் நிதி ஆணைக்குழுவின் செயலாளராக ஒய்வு பெற்றவரும் ஆவார். 1985 இல் தாய்லாந்தின் பேங்கொக் ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் பிராந்திய அபிவிருத்தி திட்டமிடலில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். "உள்நாட்டு மட்டத் திட்டமிடலில் பிராந்திய உள்ளார்ந்தங்கள்" பற்றி சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைக்காக "அதி சிறந்தது" என்ற பாராட்டைப் பெற்றார். இவர் 1982 இல் ஐக்கிய இராஜியத்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து அபிவிருத்திக் கொள்கை திட்டமிடலில் டிப்ளோமாவையும் UNCRD பிராந்திய அபிவிருத்தி திட்டமிடலிலும் 1990 இல் நகோயாவில் ஆசிய அபிவிருத்தி பெறுகை நடைமுறை - 1991 பற்றி டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இவர் 1967 இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் இருந்து கலைமாணி பட்டத்தை பெற்றவர்.

தலைசிறந்த தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப அடைவுகள் ஊடாக பிராந்தியத்திற்கான சேவையினை அங்கீகரித்து பொதுத்துறைக்கான AITAA மேன்மை அலுமினி விருது (2005) திரு ஜயசிங்கவிற்கு வழங்கப்பட்டது.

தேசியமட்ட திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் இவர் பாரியளவு பயிற்சியினை பெற்றுள்ளதுடன் பாரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனை ஒப்படைகளில் அணித்தலைவராகவும் செயற்திட்ட முகாமைத்துவ விசேட நிபுணராகவும் செயற்பட்டார்.

திரு. ஜயசிங்க வகித்த ஏனைய பதவிகள் உள்ளடக்குவன, தலைவர் - 2006 ஜூன் முதல் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவின் தலைவர்- 2006 ஜூன் தொடக்கம் இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் துணைத் தலைவர், 2006 ஜூன் தொடக்கம் இல் தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினர். இவர் பிரதிப் பிரதம செயலளார், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ஆக பணியாற்றியதுடன் அதேசமயத்தில் தென் மாகாண கிராமிய அபிவிருத்து செயற்றிட்டதில் (ஆ.அ.வ) கடன் இலக்கம் 1128 ஸ்ரீ எஸ்.எப்) செயற்றிட்ட பணிப்பாளர் பதவியினையும் வகித்தார்.

இவர், உன்னதமிக்க அரசாங்க சேவை பதிவொன்றினை கொண்டுள்ளதுடன் பல்கலைக்கழகம், பாடசாலை இரண்டிலும் இணை பாடவிதான செயல்பாட்டிலும் ஈடுபட்டவர்.



## கலாநிதி லலித் லியனகே

கலாநிதி எந்திரி லலித் லியனகே பாதுகாப்பு அமைச்சின் கீழ் லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலோஜிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன் இப்பதவிக்கு முன்னர் இவர் லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலோஜிஸ் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரதானியாக பணியாற்றினார். லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலோஜிஸ் லிமிடட் நிறுவனமானது முப்படைகளுக்கும் இலங்கை பொலிசுக்கும் இராணுவத் தளபாடங்கள் கொள்வனவு செய்தல் அதேபோன்று பாதுகாப்பு அத்துடன் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய செயற்றிட்டங்களில் செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் நிறைவேற்று பிரிவொன்றாகும். கலாநிதி லியனகே ரஷ்யாவின் டுநேட்ஸ்க் அரச தொழில்நுட்ப பல்கலைகழகத்தில் இருந்து விசேட சித்தியுடன் மின்னியல் பொறியியலில் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களை முதலில் பெற்று தகவல் தொழில்நுட்ப பொறியியல் துறையில் மிகப் பிரபல்யமான தொழிசார் வல்லுனராவார். இதனைத்தொடர்ந்து இவர் இந்தியாவில் ஒரிசாவில் உற்பத்தி முகாமைத்துவத்திற்கான இந்திய நிறுவனத்தில் இருந்து திறமைச் சித்தியுடன் பராமரிப்பு பொறியியல் மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் அவரது தொழில்சார் வாழ்வில் மின்னியல் பொறியியலில் இருந்து தகவல் தொழில்நுட்பத்திற்கு மாறுவதற்கு திருப்புமுனையாக இருந்த ஐகிய இராச்சிய எஸ்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து முதல்வகுப்பு கௌரவப் பட்டத்துடன் கணனிக் கற்கைகள் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். கலாநிதி லியனகே மொரட்டுவை பல்கலைகழகத்தில் இருந்து நேராக “ஏ“ மற்றும் 3.97 தரப்படுத்தல் புள்ளிச் சராசரி உடனும் இ- ஆளுகையில் வியாபர நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் அதனை தொடர்ந்து பணியினை அடிப்படையாகக்கொண்ட கற்றலுக்காக இணையத்தளம் ஊடாக கற்றல் விடயப்பரப்பில் ஐக்கிய இராஜியத்தில் நோதம்பியா பல்கலைகழகத்தின் பொறியியல் மற்றும் சுற்றாடல் பீடத்தில் இருந்து கலாநிதிப் பட்டத்தினை நிறைவு செய்து தனது கல்விசார் வாழ்கையில் சிகரத்தை அடைந்தார்.

காலநிதி லியனகேவின் தொழில்சார் வாழ்க்கை கடந்த 20 வருடங்களாக மின்னியல் பொறியியல் (பெல்வத்த சீனிக் கைத்தொழில் - 1996-99), பயிற்சி நிருவாகம் (தொழிற்பயிற்சி அதிகாரசபை 1999-2004), விரிவுரையாளர் (தொலைக்கல்வி நிலையம் / இ நி அ நி 2007-09 மற்றும் நோதம்பிரியா பல்கலைக்கழகம் 2010-11), செயற்திட்ட முகாமைத்துவம் (தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் 2000-04), மற்றும் உயர் கல்வி 2004-09) போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இவர் 2015 முதல் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் சபை பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இல் இவர் தகவல் தொழில்நுட்ப/ஈஆர்பி செயற்பாட்டுக்குழுத் தலைவராகவும், கப்பல் எரிபொள் குழுவின் தலைவராகவும் கௌரவ அமைச்சரின் ஊடகப் பிரிவின் தலைவராகவும், பெறுகைக் குழுவின் உறுப்பினர் ஒருவராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக கலாநிதி லியனகே மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாக முதுமாணி பரீட்சகரொருவரும் 2013 முதல் பிரித்தானிய கணனிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் தேசிய சிறந்த தர தகவல் தொடர்பாடல் விருதுகளுக்கான நடுவர் குழாத்தின் உறுப்பினரொருவரும் ஆவார்.

தேசிய மட்ட பங்களிப்புகளுக்கு மத்தியில், உயர் கல்வித் துறைக்கான தேசிய மட்ட இணையத்தள தொலைக்கல்வி முறைமையினை நிறுவுவதற்கான மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடியாகவும் மிகவும் முக்கியமாக தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறை தரத்திற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமாவையும் அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாகவும் இருந்தார்.

2015 இல் நோதம்பிரியா பல்கலைக்கழகத்தில் சிறந்த இரண்டாம் ஆண்டு கலாநிதி கற்கை மாணவனாக இவருக்கு விருதளிக்கப்பட்டதுடன் இலங்கையில் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக்கான பங்களிப்புக்காக 2013 இல் சிசோ விருதையும் வெற்றதுடன் உயர் கல்வி சஞ்சிகையில் 2013 இல் சிறந்த ஆராச்சிக் கட்டுரை விருதும், திறன் மற்றும் வேலையினை அடிப்படையாக்க் கொண்ட கற்றலில் ஐக்கிய இராச்சிய உயர் தரப்படுத்தலும் இவருக்கு வழங்கப்பட்டது.

கலாநிதி லலித் லியனகே பொறியில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதுடன் 2007 முதல் பதவி வழி உறுப்பினராக பணியாற்றுகின்றார். இவர் பிரித்தானிய கண்னிச் சங்கம், இலங்கை கண்னிச் சங்கம் மற்றும் இலங்கை பொறியிலாளர்கள் நிறுவனம் என்பவற்றின் உறுப்பினர் ஒருவரும் ஆவார்.



## திரு. துமிந்த ராஜபக்ஸ

தொழில் ரீதியாக சட்டத்தரணியான திரு துமிந்த ராஜபக்ஸ 1999 இல் இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார். மேலும் 2000 ஒக்டோபர் முதல் இவர் பிரசித்த நொத்தாரிசாக பணியாற்றுவதுடன் 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை தென் மாகாணத்தில் குற்றவியல் சட்டத்தரணி ஒருவராக செயற்பட்டார்.

1996/1997 இல் சட்டபீட மாணவர்கள் ஒன்றியத்தின் தலைவராகவும் 2004/2005 இல் சட்ட அமைப்பின் செயலாளராகவும் செயற்பட்டதுடன் கராப்பிட்டி சிறுநீரக பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் (2012-2014) ஆகவும் செயற்பட்டார்.

இவர் உத்தியோகர்பூர்வமற்ற நீதவானும், சமாதான நீதவான் ஒருவராகவும் பணியாற்றுகின்றார். இவர் 2015 ஒக்டோபரில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் சபைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அப்போதிருந்து சபை உறுப்பினர் ஒருவராக பணியாற்றுகின்றார்.



## திரு. எசான் பெரோரா

திரு எசான் பெரேரா ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்து கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராவதுடன் அதே போன்று தாபிக்கப்பட்ட பாரிய நிறுவனங்களில் நிபுணத்துவ அறிவுடன் கூடிய நிதியல் சேவைகள், காலநிலை மாற்றம், சில்லறை, சொத்து அபிவிருத்தி, ஆடை தயாரித்தல், மொன்பொருள் விருத்தி செய்தல் மற்றும் விருந்தோம்பல் அத்துடன் பொழுதுபோக்குக் துறைகள் உள்ளடங்களாக பல்வேறு தொழிற்துறைகளில் நிதி, தொழிற்பாடுகள் மற்றும் பொது முகாமைத்துவம் போன்றவற்றில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட முன்னேற்கரமான அனுபவத்துடன் கூடிய உயர்வான அடைவுகளுடனும் பெறுபேறுகளால் தூண்டப்பட்ட சிரேஸ்ட மட்ட நிறைவேற்று அலுவலர் ஒருவரும் ஆவார்.

வளர்ச்சியினை தூண்டுதல் மற்றும் வினைத்திறன் மற்றும் அடிநிலை இலாபம் என்பவற்றை அதிகரிக்கின்ற வர்த்தக தொழிற்பாடுகளை சீரமைக்கும் இயலுமையினை அவர் எடுத்துக் காட்டியுள்ளதுடன் உற்பத்தி திறன் மோம்படுத்தல்கள் மற்றும் மாற்று முகாமைத்துவம் என்பவற்றிற்கு மேலதிகமாக பொது முகாமைத்துலம், வியாபார திட்டமிடல் நிதியியல் கட்டுப்பாடுகளை மற்றும் செயன்முறைகளை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் போன்றவற்றில் வலுவான தகமைகளை கொண்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, ஜேர்மனி, கஸகிஸ்தான் ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, நேபாளம், இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, நியுசிலாந்து உள்ளடங்களாக வெளிநாடுகளுக்கு பயணித்து முக்கிய ஒப்படைகளை மேற்கொள்வதிலும், பேச்சுவார்த்தைகளை நடாத்துவதிலும் அனுபவம் பெற்றவர்.



## சுனில் ஜீ கலேஸ்வரி

2016 மே வரை சிலோன் பெற்றோலியம் ஸ்டோறேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் சபையின் பணிப்பாளரான சுனில் ஜீ கலேஸ்வரி 2013 செப்டம்பர் தொடக்கம் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் திணைக்களத்திற்கு தலைமை வகிக்கின்றார். இவர் 1995 ஆம் ஆண்டில் இந்தியன் ஒயில் கூட்டுத்தாபன லிமிட்டடில் சேர்ந்து அவரது தொழிலின் ஆரம்ப கட்டங்களின் போது பல்வேறு உள்நாட்டு அதே போன்று கரையோர முனையங்களில் பெற்றோலிய எண்ணெய் முனையத் தொழிற்பாடுகளில் பணிபுரிந்துள்ளார். 2009 தொடக்கம் 2013 ஆண்டு வரை இவருக்கு சர்வதேச வர்த்தகத்தினை கையாள்வதற்கு இந்திய ஒயில் நிறுவனம் பொறுப்பளித்திருந்ததுடன் வாயு எண்ணெய், பெற்றோல், எரிபொருள் எண்ணெய், படிக எண்ணெய், தார் போன்றவற்றுக்கான சர்வதேச வர்த்தகம் ஒப்பந்த பேச்சுவார்த்தை போன்றவற்றில் நிபுணத்துவத்தை நிறுவினார்.

2013 ஆண்டு முதல் இவர் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் திணைக்களத்திற்கு தலைமை வகிப்பதுடன் வாகன எரிபொருள் துறைக்கான பெற்றோலிய உற்பத்திகள் அதே போன்று இலங்கையின் கப்பல் எரிபொருள் வர்த்தகத்திற்கான கடல்சார் எரிபொருட்கள் என்பவற்றின் ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் மற்றும் இறக்குமதி, கப்பற்துறை தொழிற்பாடுகள் ஏற்பாட்டு சேவைகள், கப்பல் எரிபொருள் மற்றும் தொழிற்பாடுகள், தாங்கிகள் மற்றும் கப்பல் எரிபொருள் கொள்கலன் வாடகைக்கமர்த்தல், வாகன எரிபொருள் சில்லறை விற்பனை மற்றும் கப்பல் எரிபொருள் விற்பனைகளில் எண்ணை விலை இடர் முகாமைத்தவம் போன்றவற்றை கவனிக்கின்றார்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் 1995 ஆம் ஆண்டிலிருந்து அதிக அளவிலான அனுபவத்துடன் பெற்றோலிய எண்ணை முனையத்தொழிற்பாடுகள் மற்றும் செயன்முறை தன்னியகப்படுத்தல் ஒருங்கிணைக்கப்பட்ட வழங்கல் வர்தகம் மற்றும் கப்பல்துறை அதே போன்று கடல்சார் கப்பல் எரிபொருள் வர்த்தகம் மற்றும் தொழிற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்குகின்ற முழுமயான மூன்றாம் நிலை வழங்கல் சங்கிலியில் அனுபவத்தை பெற்றுள்ளார்.



## திருமதி கே.டீ. ஆர் ஒல்கா

திருமதி கே.டீ.ஆர். ஒல்கா அரசாங்கத்துறை மற்றும் அரசாங்க நிதியியல் முகாமைத்துவத்தில் அதிகளவு அனுபவத்தினை கொண்டவர். 1990 இல் இவர் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்தார். அப்போதிருந்து இவர் பலவேறு அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றி வருகின்றார். தற்போது இவர் அரசாங்க நிதித் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் பணிப்பாளர் பதவியினை வகிக்கின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முதல் வகுப்பு கௌரவ பட்டத்துடன் விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்) விசேட பட்டத்தினை பெற்றுள்ளார். இவர் 1987 இல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டய உரிம பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் 2015 சிலோன் பெற்றோலியம் ஸ்டோறேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் சபை பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதற்கு மேலதிகமாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஒருவரும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளருமாவார். மேற் கூறப்பட்ட மூனறு நிறுவனங்களினதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தலைவராகவும் இவர் செயற்படுகின்றார்



## திரு சியாம் போரா

பெற்றேலியத்துறையில் 26 வருடங்களுக்கு மேலான நிபுணத்துவத்துடன் திரு சியாம் போரா சில்லறை, நிறுவனசார் விற்பனைகள், தொழிற்படுத்தல் அத்துடன் ஏற்பாட்டுச் சேவைகள் போன்ற பல் வேறு திணைக்களங்களில் இந்திய ஒயில் கூட்டுத்தாபன லிமிட்டடில், இந்தியாவின் முன்னணிக் கம்பனி மற்றும் போச்சூன் 500 உலக கம்பனி போன்றவற்றில் பலவேறு அனுபவத்தை பெற்றுள்ளார். இவர் கணிசமான துறைசார் அனுபவத்தை பெற்றுள்ளதுடன் லங்கா இந்திய ஒயில் கம்பனி பிஎல்சீ யின் முகாமைத்துவ பணிப்பாளராக பதிவியேற்பதற்கு முன்னர் மகாராஸ்டிரா மற்றும் கோவா மாநிலங்களின் இந்திய ஒயில் சில்லறை திணைக்களத்திற்கு தலைமை வகித்தார்.

பெங்ளுர் பல்கலைக் கழகத்திலிருந்து சிவில் பொறியியல், குர்காஓன் முகாமைத்து அபிவிருத்தி நிறுவனத்தின் கௌரவமிக்க "தேசிய முகாமைத்து நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து" பட்டபின் படிப்பு முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் ராஜஸ்தான் பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பட்டப்பின் படிப்பு ஆகியவற்றுடன் திரு போரா இந்தியன் ஒயில் கம்பனியில் பல முக்கிய பதவிகளில் சேவையாற்றியுள்ளார். கள மட்டத்தில் நீண்ட மற்றும் வெற்றிகரமான மற்றும் எளிமையுடனும் மூன்று வேறுபட்ட விற்பனைப் பிரிவுகளுக்கு தலைவராகவும் இவர் இருந்து வருவதுடன் ஏற்பாட்டு சேவைகளை கவனித்து தொழிற்படுத்தல்கள் திணைக்களத்திலும் பணியாற்றினார்.



## திரு அனுஜ் ஜெய்ன்

தற்போது திரு அனுஜ் ஜெய்ன் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி பீஎல்சீயின் நிதிப் பிரதானியாக பணியாற்றுவதுடன் கம்பனியின் நிதியில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் அனைத்து விடயங்களையும் கவனிக்கின்றார்.

தொழில் ரீதியாக திரு ஜெய்ன் இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பட்டயக் கணக்காளர் ஒருவராவார். 1992 இல் அவரது வர்த்தகமாணி (கௌரவ) பட்டத்தினையும் நிறைவுசெய்த பின்னர் 1995 இல் அவர் தனது பட்டைய கணக்காளரானதுடன் அதன் பின்னர் உடனடியாக இந்தியன் ஒயில் கூட்டுத்தாபன லிமிட்டட் இல் இணைந்தார். அவர் சான்றுப்படுத்தப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரும் இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் வியாபார நிதியியல் முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

திரு ஜெய்ன் சிலோன் பெற்றோலியம் ஸ்டோறேஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர் ஒருவரும் ஆவார். கடந்த 20 வருடங்களின் போது இந்தியன் ஒயில் கம்பனியின் பல்வேறு அலுவலகங்களில் அவரது பதவிக்காலத்தின் போது அவர் கூட்டுநிறுவன அலுவலகம் உள்ளடங்களாக இந்தியின் ஒயில் கம்பனியின் பல்வேறு அலுவலகங்களில் முக்கிய பதவிகளுக்கு பொறுப்பு வகித்த்துடன் நிறுவன நிதி, திரைசேரி மற்றும் வங்கித் தொழில், கேள்வி மற்றும் வழங்கல் சங்கிலி உச்சப்பயன்பாடு, கப்பல்துறை, ஐஎப்ஆர்எஸ், எஸ்ஏபீ, இடர் முகாமைத்துவம், திரட்டுதல், வரவு செலவுத் திட்டமிடல், படுகடன் முகாமைத்துவம், காப்புறுதி, நிறுவன மற்றும் நேரடியற்ற வரி விதிப்பு, மூலதன மற்றும் வருவாய் முன்மொழிவுகள், நிதியியல் ஒத்திசைவு, சபை உபாய கூட்டங்களுக்கான எடுத்துரைப்பு, கணக்காய்வுக் குழு, சபைக் கூட்டங்கள், இலாபம் உச்சப்படுத்தலுக்கான விசேட ஆய்வுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய முக்கிய ஒப்படைகளையும் கையாண்டுள்ளார்.

இவர் ஆர்வமிக்க விளையாட்டு வீரரும் இசைப்பிரியருமம் ஆவார்.



## திரு ரன்திர் சிங்

திரு ரன்திர் சிங் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி பீஎல்சீயின் சிரேஷ்ட துணைத்தலைவர் (தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள்) ஆவார்.

ரன்திர் சிங் குருக்கெஸ்றா தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து இயந்திரவியல் பொறியியலில் தொழில்நுட்பமாணிப் பட்டத்தினையும் புது தில்லி புகையிரத போக்குரவத்து நிறுவனத்திலிருந்து பல்துறை வழிமுறை ஏற்பாட்டு சேவையில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

தற்போது லங்கா இந்திய ஒயில் கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் தொழிற்பாட்டுக்கு தலைமை வகித்து சில்லறை விற்பனைக்காக வாயு எண்ணெய் மற்றும் பெற்றோல் இறக்குமதிக்கும் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் கப்பல் எரிபொருளுக்கான கடலசார் பெற்றோல் மற்றும் எரிபொருள் எண்ணெய் இறக்குமதிக்கும் பொறுப்பாக உள்ளார்.

# முகாமைத்துவ அணி

## உயர் முகாமைத்துவம்

| | |
|---|---|
| தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் | திரு. செஹான் செனவிரத்ன |

## நிறுவன முகாமைத்துவம்

| | |
|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | திரு. ஓ.பீ. கக்கொட ஆராச்சி |
| பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் துணைச்சேவைகள்) | திரு. பீ. அத்துகோரள |
| பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்) | திரு. பீ.டீ.பீ. தர்மவன்ச |
| பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) | திரு.ஏ. மார்டின் |
| பிரதம தகவல் அலுவலர் | திரு. ரோய் பெரேரா |

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | |
|---|---|
| களஞ்சிய முகாமையாளர் | திருமதி. எஸ். விக்ரமாராச்சி |
| நிதி முகாமையாளர் | திரு. ஜே.ஏ.யு.ஆர்.கே. ஜயலத் முகாமையாளர், |
| உள்ளக கணக்காய்வு | திரு. .எம்.எச்.பி. தசநாயக்க |
| முனைய முகாமையாளர் (முத்துராஜவெல) | திரு. எம்.எஸ்.எம். நியாஸ் |
| தொழிற்படுத்தல் முகாமையாளர் (வாகனம்) | திரு. டீ.ஏ.ஜே.எஸ். தர்மபிரிய |
| தொழிற்படுத்தல் முகாமையாளர் (மொத்த அசைவு மற்றும் மொத்த செயன்முறைப்படுத்தல்) | திரு. டி.வி.சரச்சந்திர |
| முகாமையாளர் (பாதுகாப்பு) | திரு. என். ஜயவர்தன |
| முகாமையாளர் (நிறுவன விவகாரங்கள்) | திருமதி. எஸ். கமகே |
| முகாமையாளர் (பெறுகை) | திரு.ஆர்.எஸ்.எஸ். பிரேமகுமார |
| மனிதவள முகாமையாளர் | திரு. கே.எம்.என்.ஏ.சீ. பெரேரா |
| பிரதான சட்ட அலுவலர் | திருவதி. டப்.ரி. பொன்சேகா |
| முகாமையாளர் (விநியோகம்) | திரு. டப்.எம்.ரி.டப்.ஏ. பண்டார |
| தொழிற்படுத்தல் முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடு) | திரு. ஆர்.ஏ.பீ.ஏ. ரணசிங்க |
| முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி) | திரு. ஈ.ஏ.ஆர்.டி. பண்டார |
| முகாமையாளர்(வளாகங்கள் மற்றும் பொறியில் சேவைகள்) | திரு. அஜித் விஜேசூரிய |
| முகாமையாளர் , ஆய்வுகூடம் | திருமதி. கே.என். ரத்நாயக்க |
| முகாமையாளர், தீ மற்றும் பாதுகாப்பு | திரு. ரி.ஏ. ரேமன்ட் |
| பதில் பொறியியல் முகாமையாளர் | திரு. ஜி.எம்.ஏ. பண்டார |
| பதில் புலனாய்வு முகாமையாளர் | திரு. டீ.ஆர். கூமாசறு |
| பிரதான சட்ட அலுவலர் | திரு. எல்.டப். குணசேகர |
| மருத்துவ அலுவலர் | திருமதி. ஆர். சுசிரிவர்தன |
| முகாமையாளர் (தகவல் முறைமைகள்) | திரு.ஜே.ஜீ.ஜே.டப். தர்மபிரேம |



முதல் வரிசை (அமர்ந்திருப்போர்) – இடமிருந்து வலம்

திரு. ஓ பீ கக்கொட ஆரச்சி –பிரதி பொது முகாமையாளர் (நிதி), திரு. பீ அதுகோரள - பிரதி பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் துணைச்சேவைகள்), திரு. செஹான் செனவிரத்ன - தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், திரு. பீ டீ பீ தர்மவன்ச - பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்களும் நிருவாகமும்), திரு. ஏ. மார்டின் பிரதி பொது முகாமையாளர் (தொழிற்படுத்தல்), திரு. ரோய் பெரேரா (பிரதம தகவல் அலுவலர்)

நடுவரிசை – இடமிருந்து வலம்

திருமதி. எஸ் விக்ரமாரச்சி- களஞ்சிய முகாமையாளர், திருkதி. டப்ளியு ரி பொன்சேகா – பிரதம சட்ட அலுவலர், திருமதி. கே என் ரத்னாயக்க – முகாமையாளர் ஆய்வுகூடம், திருமதி. எஸ் கமகே – முகாமையாளர், நிறுவன விவகாரங்கள், திரு. ரி ஏ ரேமன்ட் – தீ மற்றும் பாதுகாப்பு முகாமையாளர், திரு. கே எம் என் ஏ சி பெரேரா – மனிதவள முகாமையாளர், திரு. ஜே ஏ யு ஆர் கே ஜயலத் – நிதி முகாமையாளர், திரு. எம் எஸ் எம் நியாஸ் – முனைய முகாமையாளர் (முத்துராஜவல), திரு. ஆர் ஏ பீ ஏ ரணசிங்க – தொழிற்பாடுகள் முகாமையாளர் (கரை கடந்த தொழிற்பாடுகள்)

பின் வரிசை – இடமிருந்து வலம்

திரு. ஈ ஏ ஆர் டீ பண்டார – முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி), திரு. என் ஜயவர்தன – முகாமையாளர் (பாதுகாப்பு), திரு. டீ எம் எச் பி தசநாயக்க – உள்ளக கணக்காய்வு முகாமையாளர், திரு. அஜித் விஜேசூரிய – முகாமையாளர் (வளாகம் மற்றும் பொறியியல் சேவைகள்), திரு. டப்ளியு எம் ரி டப்ளியு ஏ பண்டார– முகாமையாளர் (விநியோகம்), திரு. ஆர் எஸ் எஸ் பிரேமகுமார – முகாமையாளர் (கொள்வனவு), திரு. ரி வி சரத்சந்திர – முகாமையாளர் (மொத்த அசைவும் மொத்த செயன்முறைப்படுத்தலும்), திரு. டீ ஏ ஜே எஸ் தர்மபிரிய– முகாமையாளர் (வாகனம்)




LANKA
NISSAN DIESEL

## நிறுவனம் பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| **கம்பனியின் பெயர்** | சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் |
| **கம்பனி பதிவிலக்கம்** | PB 1221 |
| **வரி செலுத்துநர் அடையாள இல. (TIN)** | 134011157 |
| **பதிவு செய்யப்பட்ட அலுவலகம்** | எண்ணெய் நிலையம், கொலன்னாவ,<br>வெல்லம்பிடிய,<br>இலங்கை |
| **கணக்காய்வாளர்கள்** | இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்<br>306/72, பொல்துவ வீதி<br>பத்தரமுல்லை<br>இலங்கை |
| **செயலாளர்கள்** | எக்கவுன்டிங் சிஸ்டம் செக்ரெடரியல் சேவிஸ்ஸ் பிரைவட் லிமிடட்<br>இல.11, காசல் லேன்<br>கொழும்பு 04 |
| **வங்கியாளர்கள்** | இலங்கை வங்கி<br>கூட்டுநிறுவன கிளை<br>தலைமை அலுவலக கட்டிடம்<br>இல 04, இலங்கை வங்கி மாவத்தை<br>கொழும்பு 01 |
| | மக்கள் வங்கி<br>சர்வதேசப் பிரிவு<br>இல 91, ACHC கட்டிடம்,<br>சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை<br>கொழும்பு 02 |


අවතැන්වූවන්ට කෑම පාර්සල් 1500ක්
Ceylon Petroleum Storage Terminals Limited wins National Bronz
In Extra Large Category for Service
ගංවතුරෙන් තෙල් සංස්ථා නළවල කිසිම තෙල් කාන්දුවක් නෑ
ඇමැති චන්දිම වීරක්කොඩි
කොළඹින් කොලොන්නාවට අලුතින් තෙල් නළයක්
තෙල් ටැංකි ඉන්දීය සමාගමකට පැවරුවොත් දැඩි ක්‍රියා මාර්ග
ලංකා ඛනිජ තෙල් පොදු සේවක සංගමයේ සභාපති
සේවා විශිෂ්ටත්වය වෙනුවෙන් ලෝකඩ සම්මානය සිලෝන් පෙට්‍රෝලියම්ට
16 පුවත් / NEWS
පුහුණුව නිම කළ පෙට්‍රෝලියම් ගිනි භටයන් 35ක් විසිර ගියි
16 පුවත් / NEWS
සිලෝන් පෙට්‍රෝලියම් ආයතනයේ සේවක සේවිකාවන්
ලුණුගම්වෙහෙර දහම් පාසල් දරුවන්ට පොත්පත්-උපකරණ
පෙට්‍රෝලියම් ආරක්ෂක නිලධාරීන් 49ක් විසිර යති
Passing out parade of CPST security officers
A passing out parade of 49 new security officers recruited to the Ceylon Petroleum Storage Terminals (CPST) was recently held under the patronage of its Chairman and Managing Director Shehan Seneviratne.
The recruits were trained for one month at the Kalutara Police Training College.
The best shooters were also presented with awards.
Mr. Seneviratne, Security Manager Nissanka Jayawardena, Police Training College Training Director ASP Sarath Premalal, Chief Inspector Ruchira Karunanayake and Inspector Ramanayake inspected the passing out parade.
BY RAVEENDRA DEEYAGAHAGE

# முகமைத்துவக் கலந்தாய்வும்  பகுப்பாய்வும்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடடின் நடவடிக்கைகள் அடிக்கடி பொது ஊடகங்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன இது, தேவையான போதும் தேவையான இடத்திலும் இப்பொதுச் பயன்பாட்டுச் சேவையினை வழங்குகின்ற  சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடடின் அர்ப்பணிப்பிற்கு மிகவும் எதிரான விதத்தில் மிகப் பாதகமான பொதுமக்கள் எண்ணப்பாங்கொன்றினைத் தோற்றுவிக்ககூடியது.

பெற்றோலிய உற்பத்திகளின் சீரான விநியோகத்திற்காக நன்கு கட்டமைக்கப்பட்ட நிறுவனசார் அமைப்பொன்றினுள் மிகவும் பொறுப்புமிக்க விதமொன்றல்சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிட்ட் தொழிற்படுகின்றது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடடின் இப் பரிமாணம் பற்றிய கதையினை பொதுமக்கள் ஒருவேளைஅறியாதிருக்கக்கூடும், பணி தொடரும்..........

# தொழிற்பாட்டு மற்றும் வர்த்தக மீளாய்வு

## தொழிற்பாட்டு சூழல்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் ஆனது இலங்கையில் மூன்றாம் நிலை உற்பத்திகளை கையாளுவதில் மொத்த பெற்றோலியக் களஞ்சியம் மற்றும் விநியோக நடவடிக்கைகளை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் லங்கா இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான பூராகவும் அமைந்துள்ள 1500 இற்கும் நாடு மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுக்கு நாம் சில்லறை மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பல்வேறு துறையில் ஈடுபட்டுள்ள மொத்த நுகர்வோருக்கும் சக்தி கேள்வியினை நிறைவேற்றுவதற்கு சேவை அளிக்கின்றோம். சிபெஸ்ரேலி இன் விநியோக தொழிற்பாடானது இரண்டு சந்தைப்படுத்தல் கம்பனிகள் சார்பிலும் மொத்த உற்பத்திகளை விநியோகிப்பதை பொறுப்பேற்கின்றது.

## பெற்றோலியத் துறையின் போக்கு

இலங்கை பெற்றோலியத் துறையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய ஒயில் கம்பனி ஆகிய இரண்டு சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்கு இடையிலும் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சந்தையின் பாரிய பங்கொன்றினை கொண்டுள்ளதுடன் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற விலைகள் ஊடாக சந்தையினை ஆதிக்கம் செலுத்துகின்றது. லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, விற்பனை விலைகளை சுயாதீனமாக நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆதிக்கம் காரணமாக அதனால் நிர்ணயிக்கப்படும் விலைகளை பின்பற்றுவதற்கு நிர்பிந்திக்கப்பட்டுள்ளது. எனவே, விலை கட்டுப்பாடானது பிரதானமாக அரசாங்க கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை சார்ந்திருக்கின்றது. கேள்வியானது பெற்றோலிய விலைகளை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக தொடர்ச்சியாக உயர்வடைகின்றது. அதேவேளை தொழிற்துறை அக்கறைதாரர்கள், வெளிப்படைத் தன்மையினையும் நீண்ட கால பிரச்சினையொன்றுக்கான. சந்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வொன்றினை வழங்குகின்ற உறுதி செய்கின்ற சில்லறை விலைகளை நிர்ணயிப்பதற்காக விலையிடல் சூத்திரம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தை முன்மொழிந்துள்ளனர்.

## பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி

2015 சனவரியில் உலக பெற்றோலிய விலைகளின் வீழ்ச்சிக்கு பதிலிறுத்தி பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகளை அரசாங்கம் குறைத்தது. அனைத்து பெற்றோலிய உற்பத்திகளுக்கும் சராசரியாக 20% விலைக் குறைப்பொன்று செய்யப்பட்டதுடன் நாட்டின் வாகனங்கள் எண்ணிக்கை அதிகரிப்புடன் ஒன்றுசேர்ந்து கேள்வியில் திடீர் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், இவ்வதிகரிப்பானது பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் 95 ஒக்டேன் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போக்கு 2016 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. பெற்றோல் 92 ஒக்டேன் கேள்வி வளர்ச்சி விகிதமானது 2015 ஆண்டிற்கு எதிராக 2016 ஆம் ஆண்டின் இணையான காலப் பகுதிக்காக சுமார் 20% ஆகும். டீசல் மூலம் செலுத்தப்படுகின்ற வாகனங்களை விட எரிபொருள் சிக்கனத்தை விஞ்சிகின்ற கலப்பு வகை வாகனங்களின் அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை லங்கா ஒடோ டீசலுக்கான கேள்வியினை ஏறக்குறைய தேக்கமடையச் செய்ததுடன் இது 2015-2016 காலப் பகுதியின் போது சற்று அதிகரித்தது.

## விநியோக வழிமுறை

சிபெஸ்ரேலி தற்போது காணப்படுகின்ற வளங்களை வினைத்திறன் மிக்கவாறு பயன்படுத்தி அதிகரித்த கேள்வியினை வெற்றிகரமாக சமாளிக்கின்றது. பயன்படுத்தப்படும் விநியோக வழிமுறையும் அவற்றின் ஒதுக்கீடும் பின்வருமாறு



பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியானது சக்தி உற்பத்தி மற்றும் போக்குவரத்து துறைகளிலிருந்து அதிகரிக்கப்பட்ட கேள்வியின் காரணமாக பிரதானமாக 2016இன்போது கணிசமாக அதிகரித்தது உள்நாட்டுச் சந்தையில் காணப்படும் எரிபொருள் கேள்வியின் போக்கானது 2015 உடன் ஒப்பிடுகையில் 2017 இல் சிபெட்கோலி வருமானத்திலும் இலாபத்திலும் வளர்ச்சியினைக் கொண்டிருப்பதற்கு இட்டுச்செல்கின்றது







## நிதியியல் மீளாய்வு

## புரள்வு

மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின்போது செயன்முறைப்படுத்தல் வருவாயனது ரூபா 10.2 பில்லியனாக 9% (2015 இல் ரூபா 9.3 பில்லியன்) இனால் அதிகரித்து கடந்த ஐந்து வருடங்களில் அதிகூடிய அதிகரிப்பினை பதிவுசெய்தது.

வருமானம் ஈட்டப்பட்ட ஏனைய மூலங்கள் போக்குவரத்து வருமானம் மற்றும் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழற்பாடுகள் என்பனவாகும். கப்பல் எரிபொருள் உற்பத்திக் குறைப்பின் காரணமாக 2015 ஏப்ரலின் பின்னர் கப்பல் எரிபோருள் தொழிற்பாடு நிறுத்தப்பட்டது.

### மொத்த இலாபம்

மொத்த இலாபமானது ஆண்டின்போது ரூபா 6 பில்லியன் அறிக்கையிட்டு 13.9 % இனால் அதிகரித்தது( 2015 இல் ரூபா 5.2 பில்லியன்) இது கடந்த ஐந்து வருடங்களின் போது அதிகூடியதாகும். இவ் ஆண்டின்போது தேறிய இலாபமானது ரூபா 2.3 பில்லியனை அறிக்கையிட்டு 35.8 % இனால் அதிகரித்தது (2015 இல் ரூபா 1.7 பில்லியன்).









## மனிதவளம்

மனிதவளம் என்பது கம்பனியொன்றின் வருவாய் ஈட்டும் வாய்ப்பினதும் உற்பத்தி திறனினதும் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற அடிப்படை கூறொன்றாவதுடன் கம்பனியின் மிகப் பாரிய சொத்தாகவும் விளங்குகின்றது.

கம்பனியானது முழு நாட்டுக்கும் எரிபொருட்களை களஞ்சியம் செய்து விநியோகிப்பதன் மூலம் மாத்திரமின்றி அனைத்து இனக் குழுக்களையும் உள்ளடக்குவதன் மூலம் எமது தொழிற்படையில் இணைவதற்கு வாய்ப்புகளையும் வழங்குகின்றது. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் அவர்களது வயது, பால், மதம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது சம வாய்ப்பினை வழங்குகின்றது. சிறந்த மனிதவள முகாமைத்துவத்திற்காக கம்பனி பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## பயிற்சியும் அபிவிருத்தியும்

தொழில்நுட்ப மாற்றங்கள் விரைவாக அதிகரிக்கின்ற போக்குடன் மாற்றமடைந்து வரும் உலகத்துடன் போட்டியிடுவதற்கு புதிய திறன்களை வேண்டப்படுகின்றன. மனிதவள அபிவிருத்தி பிரிவானது தொழிலாளர் தரம் தொடக்கம் முகாமைத்துவ தரம் வரை உயர்வான உற்பத்தித் திறன், வீண் விரயத்தினைக் குறைத்தல், ஒழுக்கமிக்க தனிப்பட்டவர்களின் கூட்டுப் பாதுகாப்பினை கட்டியெழுப்புதல் போன்றவற்றினை நோக்கி தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப சாராத ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் எண்ணப்பாங்குகளை தரம் உயர்த்துவதன் மீது விசேட கவனம் செலுத்தியது. இதனால் இவ்வாண்டின் போது தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத ஊழியர்களுக்காக பல நிகழ்ச்சித்திட்டங்களும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் வெளிவாரித் தரப்பினர்களினால் நடாத்தப்படுகின்ற செயலமர்வுகள் என்பவற்றில் பங்கேற்பதற்கு ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

### வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்- 2016

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு |
|---|---|
| **முகாமைத்துவம்சார் பயிற்சி** | |
| "இலங்கைக்கான நிறுவன முகாமைத்துவம்" மீதான பயிற்சி | டோக்கியோ, யப்பான் |
| "உபாய வேலைப்படை திட்டமிடல்" மீதான கற்கைநெறி | கோலாலம்புர், மலேசியா |
| "MSME'S தென்ஆசியாவுக்கான வர்த்தக திட்டமிடல்" மீதான நிகழ்ச்சித்திட்டம் | ஒசாகா, யப்பான் |
| செயற்திட்ட முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்புர் |
| "நிறைவேற்று அலுவலர்களுக்கான அலுவலக நிர்வாக முகாமைத்துவம்" மீதான செயலமர்வு | சிங்கப்பூர் |
| "இலாபம் குறைந்த களஞ்சிய உன்னதம்" மீதான செயலமர்வு | டுபாய் |
| "கருத்திட்ட நிதியியல் மாதிரியமைத்தல்" மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் |
| "மொத்த திரவக் களஞ்சிய தாங்கி முகாமைத்துவம்" மீதான பயிற்சி கற்கைநெறி | கோலாலம்புர், மலேசியா |
| "பெறுகை இடர் முகாமைத்துவம்" மீதான செயலமர்வு | சிங்கப்புர் |
| "எண்ணெய், வாயு மற்றும் பெற்றோலிய இரசாயண முனையங்களுக்கான ஏற்றுதல் முதன்மைச் சான்றுப்படுத்தல்" மீதனா செயலமர்வு | டுபாய் |
| **தொழில்சார் அபிவிருத்தி பயிற்சி** | |
| "மனிதவள கணக்காய்வு உன்னதம்" மீதனா மாநாடு | டுபாய் |
| "சிஎப்ஒ உச்சி மாநாடு 2016" | கோல்ட்கொஸ்ட், அவுஸ்திரேலியா |
| "9வது வருடாந்த உள்ளக கணக்காய்வாளர்கள் 2016" மீதனா மாநாடு | டுபாய் |
| **தொழில் மீதான பயிற்சி** | |
| "தொழில் மீதான விமானத் துறை எரிபொருள் கையாளுதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்" | |
| **ஏனையவை** | |
| பென்தம் தொழிற்சாலைக்கான பழக்கப்படுத்தல் விஜயம் | |









**உள்நாட்டு பயிற்சி – 2016**

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அறிமுகப் பயிற்சி | 01 | 174 |
| 02 | முகாமைத்துவப் பயிற்சி | 02 | 91 |
| | o வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் | | |
| | o உபாய முகாமைத்துவம் | | |
| 03 | தொழில்நுட்ப மற்றும் தொழில்சார்பயிற்சி | 15 | 629 |
| | o நிலத் தொடர்பு, மின்னல், திடீர் தாக்கப் பாதுகாப்பு | | |
| | o தர முகாமைத்துவம் ஊடாக இலாபத்தினை அதிகரிப்பது எப்படி | | |
| | o "குளிரூட்டி முறைமைகள் பராமரிப்பு" பற்றிய நடைமுறை அடிப்படையாகக் கொண்ட செயலமர்வு | | |
| | o கேள்வி நடைமுறையும் ஒப்பந்த நிருவாகமும் | | |
| | o கேள்வி ஆவணங்களை தயாரித்தல் | | |
| | o நிறுவன விசாரணை பற்றி கொள்கை சார் மற்றும் நடைமுறை சார் நோக்குகள் | | |
| | o நிறுவன விசாரணை நிகழ்ச்சித்திட்டம் (உயர்) | | |
| | o உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு அபிவிருத்தி | | |
| | o கம்பனியின் இலக்குகளை அடைவதற்கு பாதுகாப்பு ஆளணியை சீரமைத்தல் | | |
| | o "கலப்பு வகை வாகனங்கள்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | | |
| | o ஜெட் ஏ -1 எரிபொருள் கையாளுகை | | |
| 04 | மென்திறன் மற்றும் அணிப் பயிற்சி | 17 | 1008 |
| | o "சாரதிகளின் வகிபாகமும் பொறுப்புகளும்" பற்றிய செயலமர்வு | | |
| | o உற்பத்திதிறன் மேம்படுத்தல் நுட்பங்கள் | | |
| | o தனிப்பட்ட நேர்த்தி | | |
| | o "கீதய துளின் எய தகிமு" | | |
| | o "பசுமை உற்பத்தித் திறன்" | | |
| | o "பசுமை உற்பத்தித் திறன்" | | |
| | o சாதகமான, நேர்த்தியான பணியிடத்தை உருவாக்குவது எப்படி? | | |
| | o "தொழில் அபிவிருத்திக்கான ஒழுக்கம்" | | |
| | | 06 | 286 |
| 05 | ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு பயிற்சி | | |
| | o ஆயுர்வேத மருத்துவ நிகழ்ச்சித்திட்டம் | | |
| | o "சும்பா" உடற்பயிற்சி நிகழ்ச்சி | | |
| | o பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | | |
| | o தீ மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | | |
| | o போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் | | |
| | o ஆரோக்கியமான வாழ்விற்காக "யோகா" | | |
| 06 | வெளிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 27 |
| | o புதுமை தேடல் அடிப்பைடையிலான பயிற்சி - கொத்மலே | | |
| | மொத்தம் | 42 | 2,215 |



**தொழில்சார் எண்ணப்பாங்கு பற்றிய வெளியிட பயிற்சி**

நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்களுக்காக கொத்மலை நீர்ப்பாசன திணைக்களத்தின் பயிற்சி பாடசாலையில் தொழில்சார் எண்ணப்பாங்கு மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. வியாபாரத்தினை சிறந்த ஆற்றல், நம்பிக்கை மற்றும் வெற்றியுடன் நடாத்துவதற்கு இயலுமாக இருப்பதற்கும் சேவை நாடிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் சக பணியாளர்கள் பற்றிய சிறந்த ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் முகாமையாளர்களை பயிற்றுவிப்பதற்கு இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்து. சீரான வியாபார இடைத்தொடர்புக்கு அவசியமான பெறுமதிமிக்க திறன்களையும் புதிய அத்துடன் சவால்மிக்க வியாபார நிலைமைகளை நம்பிக்கையுடனும் தகைமையுடனும் கையாளுவதற்கான திறனையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக் கொண்டனர்.





# ஊழியர் நலனோம்புகை

ஊழியர்களின் பல தேவைகளை நிறைவு செய்வதற்காக வீடமைப்புக் கடன், வாகனக் கடன் உள்ளடங்கலாக பல கடன் வசதிகள் சலுகை வட்டி வீதங்களில் காணப்படுகின்றன. ஊழியர்களின் குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக கம்பனியினால் நாடு முழுவதும் 04 சுற்றுலா விடுதிகள் பராமரிக்கப்படுகின்றன. ஊழியர்களின் ஓய்வு பெறுதலின் மீது மேலதிகப் பணிக்கொடை கொடுப்பனவு மற்றும் மரணம் சம்பவிக்கும் நிகழ்வில் மரணக் பணிக்கொடையொன்று போன்றன சிக்கன சங்க நிதியங்களிலிருந்து கொடுப்பனவு செய்யப்படுகின்றன. ஊழியர்களுக்கும் அவரது குடும்பங்களினதும் நன்மைக்காக கம்பனியின் சிக்கனச் சங்கத்தினால் மருத்துவ உதவித் திட்டம் ஒன்று பேணப்படுகின்றது.

குறிப்பட்ட சேவைக் காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்துள்ள ஊழியர்களைப் பாராட்டுதல் பின்வருமாறு

| நிறைவு செய்துள்ள சேவை | சேவை விருது | பாராட்டப்பட்ட ஊழியர்களின் |
|---|---|---|
| 20 ஆண்டுகள் | ரூபா. 10,000/- | 312 |
| 25 ஆண்டுகள் | 2.5 பவுண் தங்க நாணயம் | 26 |
| 30 ஆண்டுகள் | ரூபா. 20,000/- | 30 |
| 35 ஆண்டுகள் | ரூபா. 25,000/- | 21 |

ஆண்டின் போது அரசாங்க பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் பிள்ளைகளுக்கு 92 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ஊழியர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்





கம்பனியானது இலங்கையின் பாரிய பெற்றோலிய முனையங்கள் தொழிற்படுத்துநராக விளங்குவதுடன் கையாளும் உற்பத்திகள் மிக விரைவாக தீப்பற்றக்கூடியதாகும். தொழிற்படுத்தல் நடவடிக்கைகளும் அதிகூடிய இடர் வகையின் கீழ் காணப்படுகின்றன. தொழிற்பாடுகளை கையாளுகையில் சிறிய தவறொன்று பாரிய அளவு தீயினை ஏற்படுத்தக்கூடும். பொருளாதார நாடியின் மையமாக சிபெஸ்ரேலி நாட்டின் பொருளாதாரத்தை பாரியளவு தீ முடக்கலாம். எனவே தொழிற்துறை மற்றும் தொழில்சார் ஆரோக்கியம் அத்துடன் பாதுகாப்பு என்பன சிபெஸ்ரேலி இன் தொழிற்பாடுகளில் மிக முக்கிய காரணியாக விளங்குகின்றன. சிபெஸ்ரேலி உள்ளக முதலுதவிப் பயிற்சி, தீ ஒத்திகை, பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றினை கொண்டுள்ளது.

தீ மற்றும் பாதுகாப்பு பிரிவானது ஊழியர்களின் பாதுகாப்பிற்கான ஆர்வம் மற்றும் கரிசனைகளை மேம்மடுத்துவதற்கு இரண்டு வருத்திற்கு ஒரு முறை பாதுகாப்பு போட்டிகளை நடாத்துகின்றது. போட்டினை ஆரம்பித்து தீ மற்றும் பாதுகாப்பு பிரிவு "பாதுகாப்பு வருடம்" ஆக பிரகடனப்படுத்துகின்றது.

"பாதுகாப்பு வருடம்" இன் ஒவ்வொரு மாதத்திற்கும் மிகப் பாதுகாப்பான ஊழியர்கள் அவதானிப்புகளின் ஊடாக ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் ஊழியர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மிகப் பாதுகாப்பான "வருடத்தின் ஊழியர்" மாதங்களுக்கான மிகப் பாதுகாப்பான ஊழியர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றார்.

ஆண்டின் மிகப் பாதுகாப்பான வேலைத்தளம் கொலன்னாவ நிலையத்தின் வேலைத்தளங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றது.

ஆண்டின் மிகப் பாதுகாப்பான மொத்த சாலை சிபெஸ்ரேலி இன் மொத்த சாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றது.

"பாதுகாப்பு செய்தி அறிக்கை", தீ மற்றும் பாதுகாப்பு பிரிவினால் வெளியிடப்பட்டு பிந்திய போக்குகள் மற்றும் நிகழ்வுகள் பற்றி ஊழியர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

சிபெஸ்ரேலி இன் அனைத்து தொழிற்பாடுகளும் பெற்றோலிய விநியோக தொழிற்துறையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைக்ள மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

# பிரதான செயற்திட்டங்கள்

வளர்ச்சிக்கான தளமொன்றாக பணியாற்றுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முக்கிய விரிவாக்கள் செயற்திட்டங்களின் அபிவிருத்திக்காக பல முயற்சிகளை எடுத்துள்ளது.

## 1. 12” விட்டம் கொண்ட குழாய்த் தொகுதிகளை பொருத்துதல்

கொழும்பு துறைமுக உட்பகுதி தெற்கு இறங்குதுறையிலிருந்து கொலன்னாவ முனையத்திற்கான 12” விட்டம் கொண்ட குழாய் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதுடன் சுமார் 2,471 மீற்றர் (மொத்தமாக 6,166 மீற்றரில்) திறந்த வெட்டு அகழி முறையியலை பின்பற்றி சிபெஸ்ரேலி மூலம் ஏற்கனவே மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய மாற்றீட்டுக்காக புதிய குழாய்கள் ஏற்கனவே சிபெஸ்ரேலி இன் களஞ்சியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய சுமார் 3,111 மீற்றர் திறந்து வெட்டு அகழி முறையியலினை பயன்படுத்தி புதிய குழாய்களுடன் மாற்றீடு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



## 2. குருநாகல் மொத்தச்சாலை அபிவிருத்தி

தற்போது காணப்படுகின்ற மொத்தச்சாலை வசதிகள் நவீன தீ மற்றும் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல், ஒழுங்குவிதிகளுடனும் பெற்றோலிய தொழிற்துறை தர நியமங்களுடனும் இணங்கின்ற வகையில் தரமுயர்தப்பட வேண்டும் என்பதனை சிபெஸ்ரேலி இனங்கண்டுள்ளது. இந்நோக்கில் குருநாகல் ஏற்றும் மொத்தச் சாலையில் பல மேம்படுத்தல்களும் அபிவிருத்திகளும் இனங்காணப்பட்டுள்ளன. அணைச் சுவர், தீயணைப்பு வசதிகளை களஞ்சிய பிரதேசத்திற்கு அப்பால் இடமாற்றுதல், குழாய் தொகுதிகளை

இடமாற்றுதல், களஞ்சிய பிரதேசத்திற்க்கான அனுகுவழியினை நிறுவுதல்,

தொழிற்பாட்டு பிரதேசத்திலிருந்து ஓய்வு அறைகளையும் ஏனைய வசதிகளையும் இடமாற்றுதல், மத்திய அமைவிடம் ஒன்றுக்கு பெற்றோல் நிலைத் தூணை இடமாற்றுதல், பெற்றோல் கலஞ்சியத்தை மீள் ஒழுங்கமைத்தல், மற்றும் வேண்டப்படும் பாதுகாப்பு குறியீடுகள் அத்துடன் தர நியமங்களை நிறைவு செய்கின்ற தனியான பிரதேசம் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதன் ஊடான தேவைகளை நிறைவு செய்தல் என்பன வேண்டப்படுகின்றன.

மூன்று மாடி கட்டிடம் ஒன்றினை நிர்மாணித்தல், புதிய தீ பம்பி நிலையம் ஒன்றினையும் தீ அணைப்பு அலுவலகம் ஒன்றினையும் நிர்மாணித்தல், தீ பம்பிகளையும் தீ இணைப்புகளையும் இடமாற்றுதல் மற்றும் அணைச்சுவர்களை நிர்மாணித்தல் என்பன குருநாகல் ஏற்றும் மொத்தச் சாலையில் மேம்படுத்தல் அபிவிருத்தி பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

## 3. மாகல்ல மொத்தச்சாலை அபிவிருத்தி

பெற்றோலிய கைத்தொழிலில் பாதுகாப்பு தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தீயணைப்பு முறைமையில் எதிர்கால தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு மாகல்ல மொத்தச் சாலையினை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. புதிய தீயணைப்பு பம்பி நிலையத்தின் களஞ்சிய பிரதேச அபிவிருத்தி நிர்மாணம், அலுவலகக் கட்டிடம் மற்றும் ஓய்வு அறை புதுப்பித்தல் என்பன மாகல்ல மொத்தச் சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன



## 4. கொலன்னாவ விநியோக நிலையத்தில் உள்ளக வீதி வலையமைப்பு மேம்படுத்தல்கள்

கொலன்னாவ விநியோக நிலையத்தின் உள்ளக வீதி வலையமைப்பானது இரண்டு பிரதான வீதிகளை கொண்டுள்ளதுடன் பிரதான வீதிகள், நடைபாதைகள், வடிகால் முறைமை மேம்படுத்தல்கள் மற்றும் பயணவழி பயன்பாட்டு சேவைகள் வழங்குதல் உள்ளடங்கலாக காபட் இடுவதன் மூலம் புனரமைக்கப்பட்டது. வீதி வலையமைப்பின் மேம்படுத்தலானது விநியோக நிலையத்தினுள் வினைத்திறன் மிக்க வாகன நடமாட்டத்தின் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்த்துடன் மழைக்காலங்களின் போது திடீர் வெள்ளப்பெருக்கினையும் குறைக்கின்றது.



## 5. கொலன்னாவை விநியோக நிலையத்தின் வலயம் 1-4 இல் மண்மேட்டுப் பாதுகாப்பு

வலயம் 1 முதல் 4 பிரதேச அருகாமை எல்லையின் தற்போது காணப்படுகின்ற மண்மேட்டுப் பாதுகாப்பு சரிவுச் செயலிழப்புபு காரணமாக கடுமையாக சேதமடைந்துள்ளது. சரிவின் அநேகமான இடங்கள் மழைக்காலங்களின் போது விழ்ந்துள்ளதுடன் நிலையற்றதாக தோன்றுகின்றன.

மழைப் பருவ காலங்களின் போது மேலதிக மண்ணரிப்பு ஏற்படக் கூடியதாக இருப்பதுடன் இணைந்துள்ள உயர் பிரதேசத்தினை மோசமாக பாதிக்கின்றது.

மதில் சுவரை அண்டிய ஓர வீடுகளும் கட்டமைப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே நடுத்தர அளவிலான அனர்த்தத்தினை தடுப்பதற்கும் சரிவு சரிப்படுத்தல் முறைகளை அறிமுகப்படுத்துவன் ஊடாக நிலையான விதமொன்றில் பிரதேசத்தை பேணுவதற்கும் பரிகாரப் பணிகளை நடைமுறைப்படுத்துவது தேவையாக உள்ளது. பரிகாரப்பணி 2016 ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

**6. கொலன்னாவ விநியோக நிலையத்தில் 5 இலக்க தாங்கிக்கான திருத்தப் பணிகள்**

கொலன்னா எண்ணெய் விநியோக 5 ம் இலக்கத் தாங்கி முழுயாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் டீசல் களஞ்சியத்தில் களஞ்சிய வசதியும் ஒருமைப்பாட்டினை உறுதி செய்வதற்கும் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**7. தரவு நிலையத்திற்கான அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையம்**

சிபெஸ்ரேலி நிறுவனத்தின் அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையமானது விபத்துசார்ந்த அல்லது நோக்கத்துடனான இடைத்தடங்களின் காரணமாக சிபெஸ்ரேலி தரவு நிலையத்திற்கான அனர்தமொன்றின் போது தமது தொழில் நடவடிக்கைகளுக்காக ஆண்டு முழுவதும் சிபெஸ்ரேலி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா இந்திய ஒயில் கம்பனி போன்றவற்றின் 24/7 ஈஆர்பீ முறைமைத் தொழிற்பாடுகளுக்கு உதவியளிப்பதாகும். இச் செயற்திட்டமானது முதன்மை தரவு நிலையத்தில் வன்பொருளை தரமுயர்த்துதல், தற்போதுள்ள வைப்பக முறைமையிலிருந்து புதிய வன்பொருளுக்கு மொன்பொருளை இடமாற்றுதல் மற்றும் அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலைய செயற்றிட்டத்திற்கான தீர்மானத்தின் பின்னர் கேள்விச் செயன்முறையின் ஊடாக தெரிவு செய்யப்படவுள்ள அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலைய செயற்திட்டத்திற்காக நிர்ணயிக்கப்படுகின்ற நியமிக்கப்பட்ட வசதி வழங்குகின்ற பிரதேசத்தில் அனர்த்த மீட்பு மற்றும் முகாமைத்துவ நிலைய வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றை நிறுவுதல்.

**8. கொலன்னாவ விநியோக நிலையத்தில் டிஜிடல் தனிப்பட்ட கிளை பரிமாற்று (PABX) முறைமையினை நிறுவுதல்**

கொலன்னாவ விநியோக நிலையத்தின் பழைய தனிப்பட்ட கிளை பரிமாற்று முறையானது சுமார் 25 வருடங்கள் பழைமையாகும். அடிக்கடி ஏற்படுகின்ற பழுதுகளை இல்லாமல் செய்வதற்கும்

விநியோக நிலையத்தின் உள்ளக தொடர்பாடல் வலையமைப்பினை மேம்படுத்துவதற்கும் புதிய தனிப்பட்ட கிளை பரிமாற்று முறைமை ஒன்றினைக் கொண்டு இம்முறைமை மாற்றீடு செய்யப்பட்டது. கொலன்னாவ விநியோக நிலையத்தில் உள்ளகத் தொடர்பாடல் வசதிகளை மேம்படுத்துவதற்கு புதிய டிஜிடல் தனிப்பட்ட கிளை பரிமாற்றம் ஒன்றினை கொள்வனவு செய்து பொருத்தி செயற்படுத்துவதற்கு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய தனிப்பட்ட கிளை பரிமாற்று முறைமையானது 800 நீடிப்புகளுக்கு சேவையளிக்க வல்லது.

**9. கொலன்னாவ விநியோக நிலையத்தில் உள்ள விளையாட்டரங்கிற்கான மேம்படுத்தல்கள்**

சிபெஸ்ரேலி நிறுவனத்தில் ஊழியர்களின் உடல் ஆரோக்கயத்தை வசதிப்படுத்துவதற்கு சிபெஸ்ரேலி இன் 8 ஆம் வலயத்தில் உள்ளக விளையாட்டுடரங்கு வசதி மேம்படுத்தப்பட்டது. இவ் உள்ளக விளையாட்டரங்கிற்கு சிபெஸ்ரேலி இன் அனைத்து ஊயர்களாலும் பயன்படுத்தப்படும் உடற்பயிற்சி செயற்பாடுகளுக்கு தேவையான அனைத்து வகையான உபகரணங்களுடனும் வசதியளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

**10. கொலன்னாவ விநியோக நிலையத்தின் கஜபாபுர கழிவகற்றும் பகுதிக்கான உள்ளக வேலி அமைத்தலும் மேம்படுத்தல்களும்**

சிபெஸ்ரேலி இல் முறையான கழிவகற்றும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்கமைய, கழிவு அகற்றும் வசதியினை மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பழைய கழிவு கொட்டும் வசதியானது கொலன்னாவ - ராஜகிரிய பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள தற்காலிக பிரதேசம் ஒன்றாகும். எனவே, இது தனியார் பவுஸர் நிறுத்துமிடத்திற்கு அருகாமையிவுள்ள புதிய பொருத்தமான அமைவிடம் ஒன்றிற்கு நகர்தப்பட்டுள்ளது. இவ் வசதியானது மேலதிக அகற்றல் நடைமுறைகள் முன்னெடுக்கப்படும் வரை பிரிக்கப்பட்ட கழிவுகளை கொட்டுவதற்கான நான்கு வேறான பகுதிகளை கொண்டுள்ளது.

**11. ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அலுவலகத்தினை புதுப்பித்தல்**

சிபெஸ்ரேலி இன் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அலகானது உலகளவிலான தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டது. செயற்திட்டமானது புதிதாக நிறுவப்படும் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அலகிற்கான அலுவலக இடவசதியினை வழங்குவதற்காக 8 ம்
வலயத்தில் தற்போதுதுள்ள கட்டிடம் ஒன்றினை புதிப்பிப்பதற்கு மேற்கொள்ளப்படும்.



# இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவம் என்பது நிறுவனம் ஒன்றுடன் இணையப் பெற்ற நிச்சயமின்மைகளை இனங்காணுகின்ற, பகுப்பாய்வு செய்கின்ற மற்றும் தணிப்பதற்கு முறைகளை கண்டறிகின்ற செயன்முறையொன்றாகும்.

ஏதேனும் வியாபாரச் சூழலில் தோன்றக்கூடிய நிச்சயமின்மைகள் அல்லது இடர் முறையாக முகாமை செய்யப்படாதிருப்பின் அது பாரிய நட்டங்களை அல்லது திட்டமிடப்படாத செலவினை ஏற்படுத்தக்கூடியது. அத்துடன் நற்பெயருக்கு கலங்கத்தை தோற்றுவிக்கக்கூடியது.

கம்பனியுடன் இணையப் பெற்ற இடர் மற்றும் அத்தகைய இடரினை தணிப்பதற்கு எடுக்கப்படும் முகாமைத்துவ வழிமுறைகள் பற்றிய சுருக்க விவரணம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

**சுற்றாடல் இடர்**

முக்கிய சக்தி மூலமொன்றாக விளங்குவதற்கு மத்தியில் பெற்றோலியக் கைத்தொழிலானது, வளி, நீர் மற்றும் மண் உள்ளடங்கலாக சுற்றாடல் ஆபத்துகளுக்கான பாரிய வாய்ப்பொன்றினை கொண்டுள்ளது. மனிதர்களின் வாழ்வின் மீதும் சூழல் அமைப்பு முறைக்கும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற வளி, நீர் மற்றும் மண் போன்றவற்றின் மாசடைதலை வழிவகுக்கின்றது. சுற்றாடல் இடரினை தணிப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சூழவுள்ள சுற்றாடலுக்கான ஏதேனும் பாதகமான விளைவினைக் குறைக்கும் வகையில் தொழிற்பாட்டு நடைமுறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. தோற்றுவிக்கப்படும் அனைத்து கழிவுகளும் அகற்றப்படுபவைகளும் (திரவம் மற்றும் வாயு) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினாலும் பெற்றோலியத் தொழிற்துறை பாதுகாப்பு நடைமுறைகளினாலும் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக கையாளப்படுகின்றன.

சிபெஸ்ரேலி இன் தொழிற்பாடுகளின் காரணமாக தோற்றுவிக்கப்படும் கழிவு நீரின் அளவானது மழை காலத்தின் போது எண்ணெய் நிரப்பு நிலையத்திற்கு உட்புறத்தில் மாசடையும் மழை நீருடன் ஒபடபிடும்போது சிறியதாகும். இயற்கை நீர் மூலங்கள் எண்ணெய்யின் மூலம் மாசுபடுத்தப்படுகின்றதை தடுப்பதற்கு எண்ணெய் நிரப்பு நிலையத்திற்கு வெளியில் மழை நீரை விடுவிப்பதற்கு முன்னர் ஈர்ப்பு வேறாக்கி கோட்பாடுகளின் கீழ் தொழிற்படுகின்ற நீர் வேறாக்கி அலகான "இடை விளக்கி" பயன்படுத்தப்படுகின்றது.

வளி மாசடைதல் சாத்தியமானது வளி தரத்தினை பரீட்சிப்பதன் மூலம் கால முறையாக அளவிடப்படுகின்றது. சூழலுக்கான பெற்றோலிய ஆவியின் தோற்றப்பாட்டினை குறைப்பதற்கு பொறியியல் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பெற்றோலிய ஆவிக்கு கிரமமாக ஆட்படுகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்றுதல் மற்றும் இறக்குதல் தொழிற்பாடுகளின் போது கசிந்து வழிந்தோடுதலை கட்டுப்படுத்துவதன் மூலம் பெற்றோலிய உற்பத்திகள் மூலம் மண் மாசடைதல் குறைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் விபத்து ரீதியாக எண்ணெய் மாசுபடும் சந்தர்ப்பங்களில் மண் மீது எண்ணெய் புலங்கள் பரவுவதைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதிகளவிலான கசிந்து வழிந்தோடுதல் அல்லது கசிவுகளுக்காக வெக்கும் பம்பிகளின் மூலம் எண்ணெய் அகற்றப்படுவதுடன் மாசடைவதைக் குறைப்பதற்கு எண்ணெய் உறிஞ்சிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**பொருளாதார இடர்**

இலங்கையானது பெற்றோலிய உற்பத்திகளின் நுகர்வுக்கு இறக்குமதியினை நம்பியிருக்கும் நாடொன்றாகும். கம்பனியானது சந்தையில் தலைமை வகிக்கின்றதும் முழுமையாக அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனமுமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளது. இதனால், கம்பனியானது சர்வதேச மற்றும் உள்நாட்டு பொருளாதார இடருக்கு அதிகளவில் ஆட்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் வேறு பல தொழிற்துறைகளும் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் கடற்றொழில் அத்துடன் கமத்தொழில் போன்ற பெற்றோலியக் கைத்தொழில் மீதும் பாரிய தாக்கத்தினை

## நாம் இடர்களை எவ்வாறு முகாமை இடரினை துகாமை செங்வதனை வலுப்படுத்தல்

எமது உபாயக் குறிக்கோள்களை எய்துவதற்கு காத்திரமான இடர் முகாமைத்துவம் அடிப்படையானது என்பதனை நாம் அங்கீகரிக்கின்றோம்.

இடர் முகாமைத்துவமானது எமது முக்கிய வியாபார நடவடிக்கைகள், தொழிற்பாடுகள் மற்றும் செயன்முறைகளில் உட்பொதிந்துள்ளது

இடருக்கான முக்கியத்துவமும் எமது சகிப்பும் எமது தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் முக்கிய கரிசனைகளாக விளங்குகின்றன

**திரவத்தன்மை இடர்**

கம்பனியின் நிதி வழங்கல், கம்பனியின் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றபோது நிதியியல் இடர் தோன்றுகின்றது. கம்பனியானது முன்னெடுக்கப்படும் வியாபார தொழிற்பாடுகளுக்கான, மூலதன செயற்திட்டங்களுக்கான மற்றும் வேறு முதலீடுகளுக்கான போதிய நிதியங்களை பெற்றுக் கொள்வதற்கு இயலாது இருக்குமெனில் மோசமாக பாதிக்கப்படக்கூடியதாகும்.

**தொழிற்பாட்டு இடர்**

தொழிற்பாட்டு இடரானது, உள்ளக செயன்முறைகள் போதாமை அல்லது தவறுகின்றமை, மக்கள் மற்றும் முறைமை போதாமை அல்லது வெளிவாரி நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற இடராகும். இவை நாம் தொழிற்படுகின்ற மக்கள், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் முழுவதும் தொடர்புபட்ட இடர்களாகும். இது நிறுவனத்தின் நற்பெயரின் மீது பாரிய தாக்கம் ஒன்றினை கொண்டதாகும். சிபெஸ்ரேலி இன் தர உத்தரவாத செயன்முறையானது இறுதிப் பயன்பாட்டாளர்களுக்கு விநியோகிக்கப்படும் உற்பத்திகள், உலகளாவிய எரிபொருள் பட்டயத்தின் மீது தொழில்நுட்ப விபரக் குறிப்பு குழுவினால் எடுத்துரைக்கப்படும் உற்பத்தி விபரங்களுடன் இணங்குகின்றன என்பதனையும் உற்பத்தியின் மிகச் சிறந்த தரம் தாமதமின்றி ஒப்படைக்கப்படுகின்றது என்பதனையும் உறுதி செய்கின்றது.

**சட்ட மற்றும் அரசியல் இடர்**

வியாபார நிறுவனம் ஒன்றாக கம்பனியானது நாட்டின் சட்ட மற்றும் அரசியல் கட்டமைப்பு அத்துடன் அபிவிருத்தி என்பவற்றினால் பாதிக்கப்படக்கூடியதாகும். கம்பனியின் சட்ட ரீதியான தொழிற்பாடானாது இலங்கையில் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கம்பனி இணங்கி ஒழுகுவதனை உறுதி செய்கின்றது. ஒழுங்குவிதிகளுக்கு உட்படுத்தப்படுகின்ற முக்கிய விடயப் பரப்புக்கள், தொழில், வரிச் சட்டங்கள் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.







## இடர் மிக உயர்வானதாகும்

முனையங்களில் மொத்த பெற்றோலிய உற்பத்திகளின் பெறுகை, களஞ்சியப்படுத்தல் மற்றும் ஏற்றி இறக்கல் மற்றும் முனைய உபகரணங்களை பராமரித்தல் போன்றன குறிப்பிடத்தக்க பாதுகாப்பு இடர்களுக்கு அதிக வலுச் சேர்க்கும் நடவடிக்கைகளாகும். எனவே, முறையான பாதுகாப்பு நடைமுறைகள் நிறுவப்பட்டு பின்பற்றப்படுவது அவசியமாகும்.



(அ) பெற்றோலிய உற்பத்திகளின் பெறுகை தடவைகள் மற்றும் முறை
(ஆ) கொள்ளளவும் களஞ்சிய முனையும்
(இ) பெற்றோலிய உற்பத்திகளை ஏற்றி இறக்குகின்ற வாகனங்களின் எண்ணிக்கை
(ஈ) முனையத்தின் மீது அல்லது முனையத்தை சூழவுள்ள பகுதிகளில் கிரமமான முறையில் உள்ள ஊழியர்களினதும் வீதித் தாங்கி சாரதிகளினதும் எண்ணிக்கை
(உ) உபகரணங்களின் வயதும் வகையும்.
(ஊ) ஏனைய நடவடிக்கைகள் மற்றும் முனையத்திலுள்ள வசதிகள் தொடர்பில் முனைய உபகரணங்களை தலம் அமைத்தல் (ஏற்றுகின்ற நிலைத் தூண்கள், தீப் பாதுகாப்பு உபகரணம், ஏஎஸ்ரி, குழாய்த் தொகுதி போன்றன).
(எ) வாகன அணுகுவழி, வெளியேறும் வழி மற்றும் சைகளின் மூலம் இயக்குதல் போன்றன தொடர்பிலான முனையத்தின் அமைப்பு படம்
(ஏ) பிரதேசம் குறித்தொதுக்குகின்ற காரணிகள், தரை நிலைமை மற்றும் நீர் மூலங்கள், தீய சக்திகள்.



### பயிற்சி இன்றியமையாதது

பயிற்சியானது நிகழ்வுகளை தடுப்பதற்கும் அவை நிகழுகின்ற போது பாதிப்புகளை குறைப்பதற்கும் உதவியளிக்கின்றது.

குறித்த சில பொறுப்புகளுடன் கூடிய ஊழியர்கள் குறித்துரைத்த பயிற்சிகளை வேண்டுகின்றனர்:

(அ) உற்பத்தி பெறுகைகள்
(ஆ) ஏற்றுதல் தொகுதிகளை செயற்படச் செய்தலும்
(கட்) டுப்படுத்தலும்
(இ) பாதுகாப்பான ஏற்றுதல் நடைமுறைகள்
(ஈ) கசிந்து வழிந்தோடல் கட்டுப்பாடும் அவசரகால நடைமுறைகளும்
(உ) மொத்த பெற்றோலிய கையிருப்புகளை முகாமை செய்தலும் பரிசோதித்த்லும்
(ஊ) நிவாரண ஊழியர்களின் தகுதி
(எ) இடர் முகாமைத்துவ வழிமுறைகளும் நடைமுறைகளும்
(ஐ) அவசரகால நடைமுறைகள்
(ஒ) வருகை தரு ஒப்பந்தார்ர்களை கட்டுப்படுத்தல்



## சமூகப்பொறுப்புடமை

எமது வளர்ச்சியானது நிதியியல் ரீதியாக மாத்திரமன்றி சமூக ரீதியாகவும் நிலைபெற வேண்டும் என நாம் மிகக் கடுயாக உணர்கின்றோம். இதனால், சிபெஸ்ரேலி, எமது ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆதரவளிப்பதில் எப்போதும் நியதிச்சட்ட பொறுப்புடமைகளை தாண்டிச் சென்றுள்ளது.

கம்பனியானது நாட்டின் அனைத்து புவியியல், குடித்தெகைப் பிராந்தியங்களையும், அனைத்து இனங்களையும், சமூக அமைப்புக்களையும் உள்ளடக்குகின்ற அனைத்து பொருளாதாரத்திற்கும் பணியாற்றுகின்றது. சிபெஸ்ரேலீ இன் அணியாக நாம் நாட்டின் ஒவ்வொரு சமூகத்தினதும் நாடியினை புரிந்துகொள்வதுடன் சமூகப் பொறுப்புடமையின் முக்கியத்துவத்தினை நாடு புரிந்து கொள்வதற்கு பணியாற்றுவதில் பெருமையடைகின்றோம்.



### வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதரவளித்தல்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள், உலர் உணவுகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றவற்றினை வழங்கி உதவுவதன் மூலம் 2016 இல் ஏற்பட்ட தீடீர் மற்றும் அழிவினை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கிலிருந்து நாட்டை மீட்பதற்பதல் உதவுவதற்கு சிபெஸ்ரேலி உதவிக்கரம் நீட்டியது.



### இரத்தான பிரச்சாரம்

சிபெஸ்ரேலி வருடாந்தம் இரத்தான பிரச்சாரத்தினை நடாத்துகின்றது.



### டெங்கு பரவுவதை தடுப்பதற்கான சிரமதான பிரச்சாரம்

அனைத்து மொத்தச் சாலைகளும் உள்ளடங்கலாக டெங்கு பரவுவதை தடுப்பதற்காக பல சிரமதான பிரச்சாரங்களை சிபிஎஸ்டிஎல் இவ் ஆண்டின் போது நடாத்தியது.



### வீதி தாங்கி வாகான சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2016 இல் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் மற்றும் வீதியில் வாகனம் செலுத்தும் ஒழுங்குகள் பற்றி வீதித் தாங்கி சாரதிகளுக்காக பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை சிபெஸ்ரேலி நடாத்தியது.



### சுத்தப்படுத்தல் சேவை பதவியினருக்கான உலர் உணவுகள் அன்பளிப்பு

சிபெஸ்ரேலி இன் சுத்தப்படுத்தல் சேவையில் ஈடுபட்டுள்ள வறுமையான மக்களுக்கு உலர் உணவுகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



### தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் சிறு பிள்ளை சிகிச்சை அலகுக்கான அன்பளிப்புகள்

சமூகப் பொறுப்புடமை முயற்சிகளின் பாகமொன்றாக பிள்ளைகளுக்கு பரிசுப் பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களின் முகங்களில் புன்னகையினை மலரச் செய்வதுடன் மிக முக்கியமாக அவசியமாக தேவைப்படும் மருத்துப் பொருட்களை அன்பளிப்பு செய்யவும் " மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள சிறுவர்களை காணச் செல்லுதல்".



### லுனுகம்வெகர மாணவர்களுக்கும் தம்ம பாடசாலைகளுக்கும் அன்பளிப்புகள்

லுனுகம்வெகர பிரதேசத்தில் வசிக்கின்ற வறுமையான மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் ஏனைய காகிதாதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தம்ம பாடசாலைக்கு தளபாடங்களும் தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கு சாரிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்தல்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் வீடுகளை சுத்தம் செய்வதன் மூலம் சிபெஸ்ரேலி அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.

.

## தர உத்தரவாமதளித்தல் எமது பொறுப்புடமையாகும்



# நிறுவன ஆளுகை




# நிறுவன ஆளுகை

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் நிறுவனமானது சிறந்த ஆளுகைக்கு அர்ப்பணித்துள்ளது. இது, சபையினதும் முகாமைத்துவத்தினதும் பொறுப்புக் கூறும்தன்மையினை வலுப்படுத்துவதுடன் நிறுவனத்தின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. சிறந்த ஆளுகையின் நோக்கமானது கம்பனியொன்றின் நீண்டகால வெற்றியினை தரக்கூடிய செயல்திறன்மிக்க, தொழில்முயற்சிசார்ந்த மற்றும் முன்மதியுடைய முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதாகும். இது சட்டவாக்க, கோவைகள் மற்றும் சுயாதீன நடைமுறைகள் கட்டமைப்பொன்றினை ஈடுபடுத்துகின்றது.

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தலின் பிரதான வசதிப்படுத்துநராக நிறுவனமானது பொருளாதார வினைத்திறன், நிலைபெறத்தக்க வளர்ச்சி மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு நிறுவன ஆளுகை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதியளிக்கின்றது.

நிறுவனமானது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை, 2003 இல் நிதி அமைச்சின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான அரசாங்க தொழில்முயற்சி வழிகாட்டல்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளை கடைபிடிக்கின்றது.

**பணிப்பாளர் சபை**

உரித்து கம்பனிகளினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால் சிபெஸ்ரேலி முகாமை செய்யப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் உள்ளடக்கமானது பொதுத் திறைசேரியின் (நிதித் திட்டமிடல் அமைச்சு) பிரதிநிதி ஒருவர் உள்ளடங்கலாக எட்டு (08) ஆகும். தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் தவிர அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்கள் ஆவர்.

பணிப்பாளர்கள், மீள நியமனத்திற்கு உட்பட்டு சபையில் ஆரம்ப பதவிக் காலத்தினை கொண்டிருப்பதில்லை. தீர்மானங்கள் எடுக்கின்ற போது சபையானது நிறுவன முகாமைத்துவத்திடமிருந்து தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் தேவைப்படுமாயின் வெளிவாரித் தொழில்சார் நிபுணர்களிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றது.

**சபையின் பொறுப்புடமைகள்**

நிறுவன உபாயத்தினை வழிநடாத்துவதுடன் சேர்த்து சபையானது முகாமைத்துவ செயலாற்றுகையினை கண்காணிப்பதற்கும் அக்கறைதாரர்களுக்கான போதிய இலாபத்தினை எய்துவதற்கும் பிரதானமாக பொறுப்பாக இருக்கின்ற அதேவேளை வரி, தொழில், சுற்றாடல், சமவாய்ப்பு, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு என்பன உள்ளடங்கலாக ஏற்புடைய சட்டங்களுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதி செய்கின்ற குறிக்கோள் மற்றும் சுயாதீன தீர்மானங்களை பிரயோகிப்பதாகும். சபை மற்றும் சபை துணைக் குழுக்கள் கூட்டங்களில் பிரசன்னமாவதன் மூலமும் சுற்றறிக்கை தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மூலமும் பணிப்பாளர்கள் நிறுவனத்தின் விவகாரங்களுக்கு அவர்களாக அர்ப்பணித்துள்ளனர்.

பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் சொந்த நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றி முக்கிய நியமனங்கள், பதவி உயர்வுகளை நியமித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் அத்துடன் அதன் விளைவாக பொதுவாக முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தலில் நீண்டகால கடமைப் பொறுப்புக்கள் தொடர்பில் அதன் நம்பகமான மற்றும் நம்பிக்கையான வழிமுறை ஒன்றாக நிறுவனத்தின் நீண்டகால நலன்களாக விளங்குகின்ற நிறுவனத்தின் ஒழுக்கம்சார் தொணியினை நிறுவுவதில் முக்கிய பங்காற்றுகின்றது. மேலும், சபையானது பாரிய நடவடிக்கை திட்டங்கள், இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், வருடாந்த வரவு செலவுத்திட்டங்கள் மற்றும் வியாபாரத் திட்டங்கள், நிறுவனச் செயலாற்றுகை அத்துடன் பாரிய மூலதனச் செலவினங்களை மேற்பார்வை செய்தல், கையகப்படுத்தல் மற்றும் சொத்துகளை கையுதிர்த்தல் என்பவற்றை மீளாய்வு

செய்வதற்கும் அனுமதி வழங்குவதற்கும் பொறுப்பினை கொண்டுள்ளது.

**சபை கூட்டங்கள்**

கிரமமான சபை கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறுகின்ற அதேவேளை தேவைப்படுகின்ற போதும், தேவைப்படுகின்றவாறும் விசேட சபைக் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன.
சபைக் கூட்டங்கள் முறையான நிகழ்ச்சிநிரல் ஒன்றின் மீது நடாத்தப்படுவதுடன் பணிப்பாளர்களுக்கு சபை கூட்டங்களுக்கு முன்னர் நிறுவன முகாமைத்துவத்தின் மூலம் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடங்கிய பின்னணித் தகவல்கள் வழங்கப்படும். மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது 13 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன

**இணங்குவிப்பும் வெளிப்படைத்தன்மையும்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட், அதன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் வெளிப்படைத் தன்மையினை பேணுவதற்கு அர்ப்பணித்துள்ளது. நிறுவனமானது பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதி செய்வதற்காக புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுகின்றது. 1971 இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைவாக நிறுவனத்தின் நாளாந்த தொழிற்பாடுகளினுள் வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள், இணங்குவித்தல், வழிமுறைகள் என்பன ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. நிதியியல் கூற்றுகள் வருடாந்தம் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. அத்துடன் நிதிச் சட்டத்திற்கு இணங்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை மேற்கொள்கின்றார்.

**நிறுவன முகாமைத்துவம்**

காலத்திற்கு காலம் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படுகின்ற உபாய பணிப்புரை, கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் நாளாந்த விவகாரங்களை தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர் முகாமை செய்கின்றார். சிபெஸ்ரேலி இன் தொழிற்பாடுகள் துணைப் பிரிவுகளாக பிரிக்கப்படக்கூடியன. அவை கொலன்னாவ விநியோக நிலையத்தின் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத்தின் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுகத்தில் எண்ணெய் வசதி அலுவலகம் மற்றும் நாடு முழுவதும்முள்ள லங்கா மொத்த சாலைகளின் தொழிற்பாடுகள் என்பனவாகும் முத்துராஜவெல முனைய தொழிற்பாடுகள் முனைய முகாமையாளர் (முத்துராஜவெல) மூலம் தலைமை வகிக்கப்படுகின்றது. தொழிற்பாடுகள் முகாமையாளர் (கரை கடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுகத்தின் எண்ணெய் வசதி அலுவலகத்திற்கு தலைமை வகிப்பதுடன் லங்கா மொத்த சாலைகள் பிரதி பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் சாலைகளின் கண்காணிப்பாளர்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

கொலன்னாவ எண்ணெய் விநியோக நிலையத்தின் ஒவ்வொரு பிரிவும் நிறுவனத்தின் நாளாந்த தொழிற்பாடுகளில் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளருக்கு உதவியளிக்கின்ற பிரதிப் பொது முகாமையாளர் ஒருவரினால் அல்லது முகாமையாளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. நிறுவன முகாமையாளர்கள் தமது தொடர்புடைய தொழிற்பாட்டு விடயப் பரப்புகளில் கல்விசார் பட்டங்களுடனும் தொடர்புடைய தொழில்சார் தகைமைகளுடனும் சிறந்த தகைமை பெற்றவர்களாவர்.

**கணக்காய்வுக் குழு**

கண்காய்வுக் குழுவின் உள்ளடக்கம் கணக்காய்வு குழு சிபெஸ்ரேலி இன் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களான 04 உறுப்பினர்களை கொண்டது. கண்காய்வு குழுவின் உள்ளடக்கமும் மேற்கொள்ளப்படுகின்ற தொழிற்பாடுகளும் ஆண்டறிக்கையின் 42 ஆம் பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**கையிருப்பு மீளாய்வு குழு**

இது சிபெஸ்ரேலி அலுவலர் களினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி நிறுவனத்தின் பிரதிநிதிகளினதும் பங்கேற்புடனும் வாராந்தம் நடாத்தப்படுகின்றது. கையிருப்பு நிலை மீளாயப்படுவதுடன் 03 மாத எதிர்காலத்திற்கான தேவைப்பாடு முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவு, சுத்திகரிப்பு சாலை உற்பத்திக்கு எதிராக நாட்டின் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு இனங்காணப்படுவதுடன் கப்பற் சரக்குகள், கிடைக்கப் பெறும் தாங்கி களஞ்சியக் கொள்ளளவினை கருத்திற் கொண்டு திட்டமிடப்படுகின்றது. கிரமமான உன்னிப்பான கண்காணித்தலானது நாட்டில் இடைத் தடங்கலற்ற எரிபொருள் வழங்கலை உறுதி செய்வதற்கு கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கின்றது.

**தகவல் தொழில்நுட்ப செயற்படுத்தல் குழு**

இது நிறுவனத்தின் உபாய குறிக்கோள்களுக்கு இசைவாக பிரதான தகவல் தொழில்நுட்ப கருத்திட்டங்களை மீளாய்கின்ற, கண்காணிக்கின்ற மற்றும் முன்னுரிமை படுத்துகின்ற நிருவாக அமைப்பொன்றாகும். இக்குழு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி மற்றும் சிபெஸ்ரேலி என்பவற்றிலிருந்தான உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அனைத்து அக்கறைதாரர்களினதும் நலனுக்காக முக்கிய தீர்மானங்களை எடுக்கும் செயன்முறையில் பங்கேற்று சிபெஸ்ரேலி இல் பொது தகவல் தொழில்நுட்ப மையத்தின் அபிவிருத்திக்கும் பராமரிப்பிற்கும் சாதகமாக பங்களிக்கின்றது.

**திணைக்களசார் பெறுகைக் குழு**

பொருட்கள், உற்பத்திகள், சேவைகளை கொள்வனவு செய்வதற்காக தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல் தொகுதியொன்றினை வெளியிட்டுள்ளது. வெளிப்படைத் தன்மை, தாமதங்களைக் குறைத்தல், மற்றும் நிதியியல் ரீதியாக மிகவும் அனுகூலமானவற்றை பெற்றுக் கொள்ளுதல், தரமிக்கதான சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல், கம்பனிக்கான வழங்கல்கள் போன்றவற்றினை உறுதி செய்வதற்கு தேசிய பெறுகை முகவராண்மையினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களசார் பெறுகைக் குழு என்பன தொழிற்படுகின்றன. இக்குழுவிற்கு சிபெஸ்ரேலி இன் தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமை வகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

**நிதியியல் வெளிப்படுத்தல்கள்**

நிதியியல் கூற்றுகளை உண்மையாகவும் நியாயமாகவும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். நிதியியல் கூற்றுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டினதும் இணைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முக்கிய தீர்மான கருமங்களில் பொருத்தமான தன்மை மற்றும் மாற்றங்கள் நியமங்களுடனான இணங்குவித்தல் என்ற அடிப்படையில் முகாமைத்துவத்தினதும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டது.

**உள்ளக கட்டுப்பாடுகள்**

தொழிற்பாடுகளின் செயல்திறன் மற்றும் வினைத்திறனை அடைந்து கொள்ளுதல், நிதியறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதம் ஒன்றினை வழங்குவதற்கு

கம்பனியானது ஆற்றலமிக்கதும் செயல்திறன் மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை உறுதி செய்கின்றது. இது நிதியியல் மற்றும் கணக்கீட்டு தகவல்களின் ஒருமைப்பாட்டினை உறுதி செய்கின்றது, தொழிற்பாட்டு மற்றும் இலாபத்தன்மை இலக்குகளை நிறைவு செய்கின்றது, நிறுவனம் முழுவதும் முகாமைத்துவ கொள்கைகளை ஊடுருவச் செய்கின்றது. ஏதேனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது நியாயமான உத்தரவாதம் ஒன்றினை மாத்திரம் உறுதி செய்யக்கூடியது என்பதுடன் நியாயமான காலப் பகுதி ஒன்றினுள் தவறுகள் அல்லது ஒழுங்கீனங்கள் முன்வைக்கப்படும் என்ற மிகச் சரியாக உத்தரவாதமளிக்காது.

உள்ளகக் கணக்காய்வு பிரிவானது சிபெஸ்ரேலி இன் உள்ளக கணக்காய்வு முறைமைத் தொகுதியினுள் நிறுவனம் வினைத்திறன் மிக்கவாறு தொழிற்படுவதனை உறுதி செய்கின்றது.

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வு பிரிவானது கீழ்வரும் அடிப்படை நோக்கெல்லையுடன் நிறுவனத்தின் நடைமுறைகள், விதிகள், ஒழுங்குவிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டதற்கு இணங்க நிறுவனத்தினுள் முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணப்படும் பொருட்டு மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் குறிக்கோளுடன் தொழிற்படுகின்றது;

I. தற்போது காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அனைத்து வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களும் முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்உள்ளன என்பதனை உறுதி செய்தல்.

II. முறைமை பிரயோக பொதி (SAP) மற்றும் முதன்மை பதிவேடுகளில் உள்ள அனைத்து கணக்கீட்டு தகவல்களும் செம்மையாக பேணப்படுகின்றது என்றும் தொடர்புடைய புள்ளிவிபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு தகவல்கள் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கு முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதையும் உறதி செய்தல், நிதியியல் கணக்கீட்டு கூற்றுகள் வியாபார முயற்சியின் அந்தஸ்து பற்றி உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துகின்றன என்பதனை உறுதி செய்தல்.

III. தொழிற்பாட்டில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை கணித்தல்.

IV. தொழிற்பாட்டில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறனை அனுகுதல்

V. உள்ளக கணக்காய்வு அலகானது பொதுவாக பின்வருவனவற்றை மீளாய்வு செய்து மதிப்பிடுவதற்கான அணுகுமுறை, முதன்மை கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட முறைமையொன்றினை பின்பற்றுகின்றது;

- கொள்கை குறிக்கோள்களை எய்துவதில் திணைக்களத்தினால் இயக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாடுகள் வெற்றிகரமானவை என்ற அடிப்படையில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்துப்படுகின்றவை உள்ளடங்கலாக திணைக்களத்தின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைமைகளினையும் நடைமுறைகளினையும் (நிதியியல், முகாமைத்துவம்சார் போன்ற) வடிவமைத்து தொழிற்படுத்தல்.
- தீர்மானம் எடுத்தலுக்காக மற்றும் பொறுப்புக்கூறலுக்காக அத்துடன் இத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படையில் வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை, ஒருமைப்பாடு
- குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கம் மற்றும் ஏனைய தேவைப்படுத்தல்கள் அத்துடன் முகாமைத்துவத் திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுகின்ற அளவு.
- மோசடி, துர்நடத்தை, மற்றும் ஒழுங்கீனம் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்றவை உள்ளடங்கலாக இழப்புகளிலிருந்து சொத்துகளையும் நலன்களையும் பாதுகாக்கின்ற கையகப்படுத்தல், சொத்துகளை கையுதிர்த்தல்.
- வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்கும் வீண்விரயத்தினை தவிர்ப்பதற்குமான ஒழுங்கமைப்புகள்
- சில சந்தர்ப்பங்களில் கொடுக்கல் வாங்கல் பரிசோதனை அணுகுமுறையொன்றினை பணிக்கு அமர்த்துதல்

## கம்பனியின் விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2007 இன் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றி 2016 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான அண்டறிக்கையினை சமர்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்சி அடைகின்றது.s¡

இவை, 2018 மார்ச் 07 அன்று பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டன.

முதன்மை நடவடிக்கை

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த் தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகிவற்றை உள்ளக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உடகட்டமைப்பை உரித்தாக கொள்ளுதல் தொழிற்படுத்தல், 2003 ஒக்டோபர் 13 ஆந் திகதிய 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டவாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலன்னாவ, முத்துராஜவல, நாடு முழுவதும் உள்ள மொதச் சாலைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள், கொழும்பு துறைமுகத்தின் எண்ணெய் வசதிகள் மற்றும் முத்துராஜவல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலை நங்கூர மிதவை, கொழும்பு துறைமுகம் முதல் கொலன்னாவ நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தச் சாலை, மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மற்றும் மொத்தச் சாலைகளினுள் உள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்துவதற்கான உரிமை அத்துடன்/ அல்லது இலங்கை பெற்றேலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகைஉரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்.

### தொழிற்பாடுகள் மற்றும் நிதியில் சிறப்புக் கூறுகள் பற்றிய மீளாய்வு

தொழிற்பாடு ரூபா 1.7 பில்லியன் தேறிய இலாபம் ஒன்றுடன் ரூபா 12.6 பில்லியன் வருவாய் ஒன்றினை காட்டியுள்ளது.

| விபரங்கள் | 31-12-2016 ரூபா | 31-12-2015 ரூபா |
|---|---|---|
| புரள்வு | 12,663,444,509 | 11,687,263,147 |
| வரிவிதிப்புக்கு முன்னர் உழைப்பு | 2,330,073,120 | 1,715,646,470 |
| வரிக்கு பிந்திய இலாபம்/நட்டம் | 1,738,629,426 | 1,373,983,761 |

### குறிப்பிடப்பட்ட மூலதனம்

2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கம்பனியின் குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா 7,500,000,000.00

பங்குரிமை விநியோகம் பின்வருமாறு

| | சாதாரன பங்குகள் |
|---|---|
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 500,000,000 |
| லங்கா இந்தியன் ஒயில் கம்பனி லிமிடட் | 250,000,000 |

### ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஆண்டின் போது ஆதனம் பொறித்தெகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### பங்கிலாபம்

2016 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டுக்காக பங்குகொன்றுக்கு ரூபா 0.54 இடைக்கால பங்கு இலாபம் ஒன்றினை பணிப்பாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

### நிறுவன அன்பளிப்புகள்

ஆண்டின் போது கம்பனி ரூபா . 5,657,434/= தொகை கொண்ட கொடுப்பனவுகளை அன்பளிப்புகள் மற்றும் அனுசரைனையாக வழங்கியுள்ளது.

### 2016 டிசம்பர் 31 இல் உள்ளாவாறு பணிப்பாளர் சபை

2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு சிலோன் பெற்றோலியம் ஸ்டோராஜ் ரேமினல்ஸ் லிமிடட் இன் பணிப்பாளர் சபையினர் பின்வருமாறு

### 2016 டிசம்பர் 31 இல் உள்ளாவாறு பணிப்பாளர் சபை

தெவனாமுனி சமிந்த செஹான் செனவிரத்ன

துமிந்த வீரசிங்க ராஜபக்ஷ

ரேட்பின் குணபால ஜயசிங்க

கருளுதொட்டுவாகே டோனா ரோஸ்மேரி ஒல்கா

லலித் சந்திர குமார லியனகே

எசான் பிரயதேவ் பெரேரா

சியாம் போரா

அனுஜ் ஜெயின்

ரன்திர் சிங்

**பணிப்பாளர்களின் வேதனாதிகள்**

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற வேதனாதிகள் நிதிக் கூற்றுகளுக்கான வருமானக் கூற்றில் விவரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**நலன்கள் பற்றிய பதிவேடு**

கம்பனியானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைய நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்றது. 2017 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 192(2) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அனைத்து பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய பதிவுகள் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேறகொள்ளப்பட்டன.

**நியதிச் சட்ட கொடுப்பனவுகள்**

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

**தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு**

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களை கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய, நிதியியல் கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

**ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்**

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு 30 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பிந்தி நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் எதுவும் காணப்படவில்லை.

**கணக்காய்வாளர்கள்**

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக பணிப்பாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பவரினை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற நிதியியல் ஆண்டிற்கான கணக்காய்வு ஏனெஸ்ட் என்ட் யங் பட்டயக் கணக்காளர்களின் உதவியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியியல் கூற்றுகளுக்கான விபரிக்கப்பட்ட வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளிப்படுத்தப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடனான ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராக தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதனை உறுதி செய்கின்றனர்.

**வருடாந்த பொதுக் கூட்டம்**

கம்பனியின் அதிவிசேட பொதுக் கூட்டம் 2018 மார்ச் 15 அன்று சிபெஸ்ரேலி யின் சபை அறையில் நடாத்தப்படும்.



## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### தொகுப்பு

சிபெஸ்ரேலி இன் கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பின்வரும் 03 நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது.

| | |
|---|---|
| திருமதி. கே.டீ.ஆர். ஒல்கா (திறைசேரியின் பிரதிநிதி ) | - தலைவி |
| திரு.அனுஜ்ஜெயின் (லங்காஇந்தியன்ஒயில்கம்பனிபிரதிநிதி) | - உறுப்பினர் |
| திரு. ரி. ஜி. ஜயசிங்க (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பிரதிநிதி) | - உறுப்பினர் |

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி கணக்காய்வு குழுவின் பொறுப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வு குழுவின் பணிகள்**

குழு சிபெஸ்ரேலி இன் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை, உள்ளக கணக்காய்வு செயன்முறை, உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை புரிந்து கொள்வதற்கும் இதனூடாக நிதியியல் கூற்றுகளில் தாக்கத்தினை புரிந்து கொள்வதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு அத்துடன் அண்மைய தொழில் சார் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் அறிவுறுத்தல்கள் மூலம் எழுப்பப்படும் முக்கிய கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்கின்றது. இதற்கு புறம்பாக குழுவானது கம்பனி ஆட்பட்டுள்ள இடர், இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயல்திறன் தன்மை என்பவற்றையும் மீளாய்கின்றது.

**கூட்டங்கள்**

மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிடப்பட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செயலாற்றுவதற்காக 05 கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கணக்காய்வு குழுக் கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர்கள் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இல. | திகதி | குழுவின் எண்ணிக்கை | பங்குபற்றிய உறுப்பினர்களின் | பங்குபற்றிய உறுப்பினர்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| **01** | 04.05.2016 | 03 | 03 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. அனுஜ் ஜெயின்<br>திரு.ரி.ஜி.ஜயசிங்க |
| **02.** | 13.06.2016 | 03 | 02 | திரு. அனுஜ் ஜெயின்<br>திரு.ரி.ஜி.ஜயசிங்க |
| **03.** | 09.08.2016 | 03 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. அனுஜ் ஜெயின் |
| **04.** | 16.08.2016 | 03 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு.அனுஜ்ஜெயின் |
| **05** | 25.11.2016 | 03 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்க<br>திரு.அனுஜ்ஜெயின் |

## கணக்காய்வு குழுவின் வகிபாகம்

கணக்காய்வு குழுவானது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு உபாய பிரச்சினைகள் மீது பல பரிந்துரைகளை மேற்கொண்டது.

முகாமைத்துவம், வெளிவாரி மற்றும் உள்ளக கணக்காய்வாளர்கள் உடன் இணைந்து உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் போதுமையினை மீளாய்தல். இணங்குவித்தல், வெளிப்படைதன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்தல்.

இடர்களை இனங்காணுதல் மற்றும் வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தையும் இடர் முகாமைத்துவ செயன்முறையானது அனைத்தையும் உள்ளடக்கியதும் முகாமைத்துவ ஆவணம் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கை என்பவற்றை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படுகின்றதும் என்பதனை உறுதி செய்வதன் மூலம் இடர்களை ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டமொன்றுக்கு தணிப்பதற்கான பரிகார நடவடிக்கைகளையும் மீளாய்தல்.

உயர் மட்டத்தின் தொணியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயல்திறன்மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும் கடமைப் பொறுப்பொன்றினை உருவாக்குதல். சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்க நெறிகள், ஆர்வமுரண்பாடு போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக் கொள்கைகளை மீளாய்தல், துர்நடத்தையினை, மோசடியினை விசாரணை செய்தல்.

நிலைமைகள், முன்னேற்றம், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துகின்றது.



கே.டி.ஆர். ஒல்கா
தலைவி
கண்காய்வுக் குழு




# விருதுகளும் பாராட்டுகளும்

எமது அர்ப்பணிப்பினை மீள்உறுதிப்படுத்தி, நிதியாண்டு முழுவதும் பல எண்ணிக்கையான கௌரவமிக்க விருதுகள் வழங்கப்பட்டு நாம் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்




**சிஎன்சிஐ கைத்தொழில் உன்னத விருது வழங்கும் வைபவத்தில் தேசிய வெண்கல விருது**

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட், இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளத்தினால் தொடர்ச்சியாக 15வது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட சிஎன்சிஐ கைத்தொழில் உன்னத விருது வழங்கும் வைபவத்தில் சேவை உன்னத்தில் மிகப் பாரிய கைத்தொழில் வகுப்பில் தேசிய வெண்கல விருதினை வென்றது.

**சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு வெண்கல விருது**

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் தொழில் திணைக்களத்தின் மனிதவள அபிவருத்தி பிரிவின் சமூக கலந்துரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரியளவு சேவைத் துறை 2016 இன் கீழ் சமூக கலந்துரையாடல் மற்றும் பணி ஒத்துழைப்பின் கீழ் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் வெண்கல விருதை வென்றது.


SD EXCELLENCE AWARDS
Social Dialogue & Workplace Cooperation Awards 2016
Service Sector
Large Scale
Bronze Award
CEYLON PETROLEUM STORAGE TERMINAL LIMITED
KOLONNAWA
Organized by
Social Dialogue & Workplace Cooperation Unit
Human Resource Development Division
Department of Labour
Ministry of Labour and Trade Union Relations

# நிதியியல் தகவல்கள்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. பிஓஈ/ஏ/சீபிஎஸ்ரீஎல்/01/16/01 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2017 செப்தெம்பர் 29

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின்
பங்குதாரர்களிற்கு

**சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் ('கம்பனி/ சீபிஎஸ்ரீஎல்") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் (3 தொடக்கம் 37 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட) பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட

நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் ஊழியர்களிற்கான (சீபிஎஸ்ரீஎல்) (அங்கத்தவர்கள்) ஓய்வூதிய நலன்கள் மற்றும் மருத்துவ நலன்களை சிலோன் பெற்றோலியம் கோப்பரேஷன் திரிப்ற் சொசைற்றி லிமிட்டட் (திரிப்ற் சொசைற்றி) செலுத்துகின்றது. ஓய்வுபெறும் நேரத்தில் அதன் அங்கத்தவர்களிற்கு ஒவ்வொரு சேவை ஆண்டிற்கும் மேலதிக அரைமாதச் சம்பளத்தினை திரிப்ற் சொசைற்றி செலுத்துகின்றது. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் எல்கேஏஎஸ் 19 ஊழிய நலன்களின் பிரகாரம் திரிப்ற் சொசைற்றி அதன் ஊழியர்களிற்கு ஊழியத்தின் பின்னரான நலன்களை வழங்குகின்ற சீபிஎஸ்ரீஎல் மூலமான ஒழுங்குபடுத்தலொன்றாகவும் ஊழியத்தின் பின்னரான நலன் திட்டமொன்றிற்கு தகுதியானதாகவும் காணப்படுகின்றது. எல்கேஏஎஸ் 19 இன் பிரகாரம் சீபிஎஸ்ரீஎல் மேற்படி ஓய்வூதிய நலன் திட்டத்திற்காக உண்மையாக பெறுமதியிட்டு கணக்கிட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,857.2 மில்லியன் தொகையான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய தொகையை வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் உள்ளடக்கியிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களினை அடிப்படையாகக்கொண்டு நட்டக்கழிவாக ரூபா 163.5 மில்லியன் (2015: ரூபா 163.5 மில்லியன்) படியொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்காக ரூபா 652 மில்லியன் (2015: ரூபா 336 மில்லியன்) சிக்கலான தொகையொன்றை மேற்படி தொகை உள்ளடக்குகின்றது. அதற்கிணங்க, நட்டக்கழிவிற்கான நிதியேற்பாடு ரூபா 489 மில்லியனால் (2015: ரூபா 173 மில்லியன்) குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 செப்தெம்பர் 07 இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இறைவரிச் சட்டமூலத்தின் பிரகாரம் 2018 ஏப்ரல் 01 இலிருந்து செயற்படும் வகையில் கம்பனிக்கு பிரயோகிக்கக்கூடிய வரி வீதம் 28 சதவீதமாக இருக்கும். சட்டமூலத்தின் ஏற்பாடுகள் கௌரவ சபாநாயகரின் உறுதிப்படுத்தலை பெற்றதும் செயற்பாட்டிற்கு வரும். இச் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் இந்நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக ஏதாவது தாக்கங்கள் எழக்கூடும்.

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுகின்றவாறு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஏனைய விடயம்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்களானது பொதுத் தொழிலிலுள்ள இன்னொரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டு 2016 செப்தெம்பர் 13 இல் அந்நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாத்தியமான தாக்கத்தினைத் தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியலப்படுத்தப்படும்

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| சொத்துகள் | குறிப்பு | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 16,799,855,205 | 16,687,409,915 |
| அருவச் சொத்துகள் | 11 | 7,609,019 | 17,349,661 |
| ஏனைய நிதியியல் சொத்துகள் | 14.1 | 441,724,050 | 390,385,357 |
| | | 17,249,188,274 | 17,095,144,933 |
| **நடைமுறை சொத்துகள்** | | | |
| பொருட்பதிவேடு | 12 | 413,049,408 | 328,836,430 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 13 | 6,021,067,151 | 7,203,170,013 |
| ஏனைய நிதியியல் சொத்துகள் | 14.2 | 1,920,169,313 | 1,894,647,582 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 15.1 | 2,455,417,182 | 747,965,921 |
| | | 10,809,703,053 | 10,174,619,946 |
| **மொத்த சொத்துகள்** | | 28,058,891,327 | 27,269,764,879 |
| | | | |
| **பங்குரிமையும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 16 | 7,500,000,000 | 7,500,000,000 |
| மூலதன ஒதுக்குகள் | 16.1 | 979,000,000 | 979,000,000 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | | 14,371,811,934 | 12,910,228,106 |
| **மொத்தப் பங்குரிமை** | | 22,850,811,934 | 21,389,228,106 |
| | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு | 17 | 1,234,070,802 | 1,385,634,331 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 8.1 | 1,005,757,215 | 608,969,586 |
| வட்டியுடனான கடன்களும் கடன்பாடுகளும் | 18 | 911,050,854 | 1,398,850,855 |
| | | 3,150,878,871 | 3,393,454,772 |
| | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு | 19 | 1,311,033,498 | 1,649,445,903 |
| வட்டியுடனான கடன்களும் கடன்பாடுகளும் | 18 | 599,114,311 | 781,660,127 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி | | 147,052,713 | 55,975,971 |
| **மொத்த பொறுப்புகள்** | | 2,057,200,522 | 2,487,082,001 |
| **மொத்த பங்குரிமையும் பொறுப்புகளும்** | | 28,058,891,327 | 27,269,764,879 |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந் நிதியியல் கூற்றுகள் இணங்குகின்றன என சான்றுப்படுத்துகின்றேன்

.............................................

இந்நிதியில் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும். பணிப்பாளர் சபைக்காக அதன் சார்பில் ஒப்பமிட்டது

............................................. பணிப்பாளர்

............................................. தலைவைர்/பணிப்பாளர்

52 தொடக்கம் 79 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### அனைதயும் உள்ளடக்கிய வருமானக்கூற்று

| | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 12,663,444,509 | 11,687,263,147 |
| நேரடிச் செலவுகள் | | (6,661,689,016) | (6,415,412,679) |
| **மொத்த இலாபம்** | | 6,001,755,493 | 5,271,850,468 |
| ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் | 4 | 483,200,474 | 302,700,470 |
| நிருவாகச் செலவுகள் | | (4,071,225,562) | (3,653,706,188) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | | (7,251,684) | (3,952,141) |
| **தொழிற்படுத்தல் இலாபம்** | | 2,406,478,721 | 1,916,892,609 |
| நிதி வருமானம் | 5.1 | 90,369,796 | 32,314,172 |
| நிதிச் செலவு | 5.2 | (166,775,397) | (233,560,311) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 6 | 2,330,073,120 | 1,715,646,470 |
| வருமான வரிச் செலவு | 7.1 | (591,443,694) | (341,662,709) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 1,738,629,426 | 1,373,983,761 |
| **அதனை தொடர்ந்த காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் மீதான காப்பு கணிப்பீட்டு இலாபம் | 17 | 243,863,733 | 37,093,073 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான வரி | 8.1 | (33,409,331) | (3,709,307) |
| ஆண்டுக்கான வரியினைக் கழித்து ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | 210,454,402 | 33,383,766 |
| **ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | 1,949,083,828 | 1,407,367,527 |
| **பங்கொன்றுக்கான உழைப்பு** | 9.2 | 2.32 | 1.83 |

52 தொடக்கம் 79 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### பங்குரிமை மாற்றக் கூற்று

**2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு**

| | குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா | மூலதன ஒதுக்கு ரூபா | பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2015 சனவரி 01 இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 11,502,860,579 | 19,981,860,579 |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 1,373,983,761 | 1,373,983,761 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 33,383,766 | 33,383,766 |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 1,407,367,527 | 1,407,367,527 |
| **2015 டிசம்பர் 31 ல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 12,910,228,106 | 21,389,228,106 |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 1,738,629,426 | 1,738,629,426 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 210,454,402 | 210,454,402 |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 1,949,083,828 | 1,949,083,828 |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம் | - | - | (487,500,000) | (487,500,000) |
| **2016 டிசம்பர் 31 இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 14,371,811,934 | 22,850,811,934 |

52 தொடக்கம் 79 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து /(பயன்படுத்தப்பட்ட) வருமான வரிக்கு முன்னர் இலாபம் | | 2,330,073,120 | 1,715,646,470 |
| ***சீர்படுத்தல்கள்*** | | | |
| நிதி வருமானம் | 5.1 | (90,369,796) | (32,314,172) |
| நிதிச் செலவுகள் | 5.2 | 166,775,397 | 233,560,311 |
| ஊழியர் கடன் மதிப்பு குறைவிற்கான ஒதுக்கீடு | | 2,203,697 | 1,416,487 |
| பொருட்பதிவேடு மற்றும் ஏனைய வர்த்தக பெறத்தக்கவை மதிப்பு குறைபிற்கான ஒதுக்கீடு | | (41,257,622) | 34,628,048 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனை மீதான நட்டம்/ (இலாபம்) | 4 | (51,245,219) | (8,312,102) |
| வரையறை செய்யப்பட்ட ஏற்பாடு | | 204,224,090 | 179,691,609 |
| பெறுமானத் தேய்வு | 10.2 | 800,940,058 | 824,903,822 |
| அருவச் சொத்து பெறுமதிக் குறைப்பு | 11.2 | 9,740,642 | 30,007,859 |
| **பணியாற்று மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படுத்தல்** | | 3,331,084,367 | 2,979,228,331 |
| பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு)/குறைவு | | (33,513,691) | 39,256,808 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 1,172,661,197 | 1,070,517,763 |
| ஏனைய நிதியியல் சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு | | (79,064,121) | (698,944,564) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்ததக்கவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | | (338,412,405) | (2,286,945,501) |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட /(பயன்படுத்தப்பட்ட) காசு** | | 4,052,755,347 | 1,103,112,837 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (136,988,654) | - |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | | (174,930,901) | (233,560,311) |
| செலுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட நலன் | | (111,923,886) | (99,268,514) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட /(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)** | | 3,628,911,907 | 770,284,012 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறித்தெகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல் | | (913,411,535) | (223,888,948) |
| ஆதனம், பொறித்தெகுதி மற்றும் உபகரணங்கில் இருந்து | | 51,271,409 | 8,312,102 |
| நிதி வருமானம் | 5.1 | 90,369,796 | 32,314,172 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட /(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)** | | (771,770,330) | (183,262,674) |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| கடன்பாடுகளை மீளச் செலுத்தல் | | (773,504,627) | (1,061,751,794) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | (487,500,000) | (687,500,000) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட /(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)** | | (1,261,004,627) | (1,749,251,794) |
| **காசு மற்றும் காசுக்கு சkமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | 1,596,136,950 | (1,162,230,456) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சம்மானவையும் | 15.2 | 747,965,921 | 1,910,196,377 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சம்மானவையும்** | 15.2 | 2,344,102,871 | **747,965,921** |

52 தொடக்கம் 79 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்
**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### 1. நிறுவனத் தகவல்கள்

### 1.1 பொது

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் (கம்பனி) நிறுவனமானது 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வாழிடத்தைக் கொண்டுள்ளது. கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட், எரிபொருள் நிலையம், கொலன்னாவ என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

ஆண்டின் போது கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகளானவை பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியனவாகயிருந்தன.

**1.3 தாய்க்கம்பனியும் இறுதியாக கட்டுப்படுத்துகின்ற தரப்பும்**

பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி கம்பனியின் பொறுப்பேற்கின்ற தாய்க் கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும்.

**1.4 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி**

2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்டின் நிதியியல் கூற்றுகள், 2017 செப்டெம்பர் 7 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைவாக வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்
**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### 2. தயாரித்தல் அடிப்படை

### 2.1 இணங்குவித்தல் கூற்று

நிதியியல் நிலைக்கூற்று, அனைத்துமடங்கிய வருமானக்கூற்று, பங்குரிமை மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கம்பனியின் நிதியியற் கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) இற்கமைவாகவும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 அளவிட்டுஅடிப்படை

கம்பனியின் நிதியற் கூற்றுக்களானவை நிதியியல் நிலைக்கூற்றின் உள்ள பின்வரும் விடயங்களுக்கானவை தவிர வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன:

- வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளுக்கான பொறுப்பானது காப்பீட்டு கணிப்பீட்டு அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது.

### 2.1.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றுடன் தொடருவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக தொழிலினைத் தொடருவதற்கு கம்பனி மூலவளங்களைக் கொண்டுள்ளது என திருப்தியடைகின்றனர். கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமை மீது ஏதேனும் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் முக்கிய நிச்சயமின்மைகள் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. அத்துடன் கம்பனித் தொழிற்பாடுகளை தீர்த்துக்கட்டுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவர்கள் உத்தேசிக்கவில்லை. எனவே, நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்

நிதியியல் கூற்றுகள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும்.

### 2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் ஒரேமாதிரியாக பிரயோகிக்கபட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானதாகும். முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்றொடர்களும் நடைமுறை எடுத்துரைப்புக்கு இணங்குவதற்கு அவசியப்படுகின்ற போது மீள்ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. விபரங்கள் நிதியியல் கூற்றுகளின் 24ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

### 2.4 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளின் எடுத்துரைப்பானது கணக்கீட்டுக் கொள்கை பிரயோகத்தினையும் சொத்துகளின், பொறுப்புகளின், வருமானத்தின் மற்றும் செலவுகளின்; அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இவ்வூகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமின்மைகள் எதிர்காலங்களில் சொத்துகளினது அல்லது பொறுப்புகளினது கொண்டுசெல்லும் தொகைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற முக்கிய சீராக்கமொன்றினைத் வேண்டுகின்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகளும் ஊகங்களும் முன்னெடுக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலத்திலும் இனங்காணப்படுகின்றன.

கம்பனியின் நிதியியல் கூற்றுகளில் தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயமின்மை மற்றும் முக்கிய தீர்புகள் பற்றிய மிக முக்கிய விடயப்பரப்புக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### (அ) ஊழியர் நலப்பொறுப்பு

வறையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் - பணிக்கொடையின் செலவும் அதேபோன்று தற்காலப்பெறுமதியும் காப்பு கணிப்பீட்டு விலைமதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. காப்பு கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடானது கழிவுவீதங்கள், எதிர்காலச் சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய முக்கிய தொடர்புடைய தரவுகள் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது. ஊழியர் நலங்களின் நீண்டகாலதன்மையின் விளைவாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயிமின்மைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த முக்கிய ஊகங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் கொண்டு நடாத்தப்பட்டவாறான அவற்றின் உணர்வுத்தன்மை பகுப்பாய்வுடன் சேர்த்து ஊகங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் உணர்வு பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் என்பன 17.7 ஆம் மற்றும் 17.4ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### (ஆ) வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் மதிப்பிழப்பு

வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைபெறுமதி இழந்துள்ளன என்ற பொருமையான சான்றுவுள்ளதா என்பது பற்றி நிதியில் நிலைக்கூற்றுத் திகதியில் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. தற்போதுள்ள கிடைக்கப்பெறத்தக்கவைகளின் நடைமுறை நிலைமை மற்றும் வரலாற்று ரீதியான சேகரிப்பு அனுபவம் என்பவற்றின் மீளாய்வொன்றின் அடிப்படையில் மதிப்பிழப்பு நட்டங்கள் கணிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் உள்ளபடியான மதிப்பிழப்புகளை பிரதிபலிக்கும்படியாக அத்தகைய ஏற்பாடுகள் காலமுறையாக சீர்செய்யப்படுகின்றன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை மீதான மதிப்பிழப்பு நட்டம் 2.5.11 மற்றும் 13 ஆம் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### (இ) வருமான வரியும் பிற்போடப்பட்ட வரியும்

கம்பனி, வருமான வரிக்குட்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளைத் நிர்ணயிப்பதில் முக்கிய தீர்பு தேவைப்படுகின்றது. இறுதி வரி நிர்ணயம் நிச்சயமற்றதாகவுள்ள பல கொடுக்கல்வாங்கல்களும் கணிப்புக்களும் காணப்படுகின்றன. மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டலாம் என்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி தொடர்பிலான பொறுப்புக்களை நிறுவனம் இனங்காண்கின்றது. இவ்விடயங்களின் இறுதி வரி

ளிப்பாடானது ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த தொகையிலிருந்து வேறுபடுகின்றவிடத்து அத்தகைய வேறுபாடுகளானவை அத்தகைய நிர்ணயம் மேற்கொள்ளப்பட்ட காலத்தின் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும். மேலதிகத் தகவல்கள் 07ஆம் மற்றும் 08ஆம் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

### 2.5.1 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல்வாங்கல் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய வீதத்தில் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் செய்யப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புக்களும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய மாற்றுவீதத்தில் மீள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வேறுபாடுகளும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று கிரய நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள், ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள், நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்த நாணய மாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 2.5.2 வருமானத்தினை இனங்காணுதல்

பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உட்பாயும் மற்றும் வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவிருக்கும் என்ற நிகழ்வுள்ளது என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது. வருமானமானது கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கபெறத்தக்க பிரதிபலன்களின் வர்த்தக கழிவுகள், மீளளித்தல்கள், தள்ளுபடிகள் மற்றும் விறபனை வரிகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரி) ஆகியவற்றை கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவத்தினுள் பாயும் அத்துடன் கீழே விவரிக்கப்பட்டவாறு கம்பனியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் குறித்துரைத்த மூலப்பிரமாணம் நிறைவுசெய்யப்படுகின்ற நிகழ்வுள்ளது என்ற அடிப்படையில், வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவுள்ளபோது கம்பனி வருமானத்தினை இனங்காணுகின்றது. விற்பனையுடன் தொடர்புடைய அனைத்து எதிர்பாராச் செலவுகளும் தீர்க்கப்படும் வரை வருமானம் நம்பத்தகுந்தவாறு அளவிடத்தக்கதாக கருதப்படுவதில்லை.

### அ.) சேவைகளை வழங்குதல்

சேவைகளை வழங்குவதில் இருந்தான வருமானமானது சேவைகள் வழங்கப்படுகின்ற அல்லது செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக்காலத்தில் இனங்காணப்படுகின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்
**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### முனையக் கட்டணம்

2003 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி மற்றும் திறைசேரித் திணைக்களம் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு அதனைத்தொடர்த்து 2011 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பொது பயன்பாட்டாளர் உடன்படிக்கைக்கு அமைவாக சந்தைப்படுத்தும் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற தொழிற்படுத்தல் செலவுகளை இது உள்ளடக்குகின்றது. இது, அவர்களுக்கு உரித்தான பெற்றோலிய உற்பத்திகளை மாற்றல் செய்கின்றபோது இனங்காணப்படுகின்றது. முனையக் கட்டணமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது.

### தொழிற்படுத்தல் இலாபம்

தொழிற்படுத்தல் இலாபமானது விலைகுறித்தல் சூத்திரத்தில் முன்கூட்டி நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தினை அடிப்படையாக கொண்டு இனங்காணப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக தொழிற்படுத்தல் இலாபம் அளவிடப்படுகின்றது.

### போக்குவரத்து வருமானம்

புகையிரத கொள்கலன், குழாய்த் தொகுதி, பவுசர் வணிகர்கள் மீது ஏற்பட்ட போக்குவரத்து செலவின் அறவிடுகின்றது. வருமானமானது லீட்டர் அளவு மற்றும் பயணம் செய்த தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

### கடன் வட்டி

கடன் வட்டியானது கம்பனியினால் செலுத்தப்படும் கடன் வட்டி அறவிடுவதில் கணிக்கப்படுகின்ற விலைகுறித்தல் சூத்திரத்தில் முன்கூட்டி நிர்ணயிக்கப்படும் வீதத்தில் இனங்காணப்படுகின்றது. கடன் வட்டி வருமானமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளிவிடப்படுகின்றது.

### ஆ.) நிதி வருமானம்

நிதி வருமானமானது விளைவு வட்டி முறையினை பயன்படுத்தி திரளுகின்ற வட்டியாக இனங்காணப்படுகின்றது.

### இ) ஏனையவை

ஏனைய வருமானமானது திரளுகின்ற அடிப்படையொன்றில் இனங்காணப்படுகின்றது.

முதலீடுகள் உள்ளடங்கலாக ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் அத்துடன் ஏனைய நடைமுறையற்ற சொத்துகளின் விற்பனையில் இருந்து தோன்றுகின்ற தன்மையிலான வருமானம் ஒன்றின்; தேறிய பெறுகைகள் அல்லது இழப்புகள், சொத்துகள் கொண்டுள்ள தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகளை விற்று அகற்றுவதன் மீதான பெறுகைகளில் இருந்து கழித்து வருமானக்கூற்றில் கணக்கிடப்படுகின்றது.

பிரதானமாக வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவான செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற அத்துடன் முக்கியத்துவம் அற்ற அதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் குழுவொன்றில் இருந்து தோன்றுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புகள் ஒன்றுசேர்க்கப்பட்டு தேறிய அடிப்படை ஒன்றில் அறிகையிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.5.3 செலவினத்தை இனங்காணல்

வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் அத்துடன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறன் மிக்க விதத்தில் பேணுவதில் ஏற்படுகின்ற அனைத்து செலவினமும் காலத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றன.

### 2.5.4 வரி விதிப்பு

காலத்திற்கான வரிச்செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வரியானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படும் விடயங்களுடன் அது தொடர்புபடுகின்றது என்ற அடிப்படையிலானவை தவிர ஆண்டுக்கான இலாபத்தில் இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில் வரியானது முறையே ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படுகின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் வரிவிதிப்பு அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது. தொகையினை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்களும் வரிச்சட்டங்களும் அறிக்கையிடும் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்டுள்ளவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதியியல் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டதுடன் தொடர்புடைய வரிச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்டுகின்றது.

பங்குரிமையில் நேரடியாக இனக்காணப்படுகின்ற விடையங்களுடன் தொடர்புடைய நடப்பு வரியானது பங்குரிமையில் இனங்காணப்படுவதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

### பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் நோக்கங்களுக்காக அவை கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையினை பயன்படுத்தி பிற்போடப்பட்டு வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்புகளானவை வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற, கொடுக்கல் வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றில் வரி விதிக்கத்தக்க இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்காத பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமென இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துக்கலானவை கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைப்பெறும் என்ற நிகழ்வின் அடிப்படையில், அத்துடன் வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனக்காணுதலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக

வேறுபாட்டுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து காணப்படுகின்றவிடத்து அத்துடன் கொடுக்கல் வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றி வரிவிதிக்கத்த இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத பயன்படுத்தப்படாத வரி சொத்துகளினதும், பயன்படுத்தப்படாத வரி இழப்புகளினதும் முன்கொண்டு செல்லும் தொகை பயன்படுத்த கூடியதாக உள்ளபோது அனைத்து கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து ஒன்றின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதினை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு போதிய வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வு இனிமேலும் இல்லையென்ற அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருன்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை (அத்துடன் வரிச் சட்டங்கள்) அடிப்படையாகக்கொண்டு சொத்து தேறுகின்றபோது அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஆண்டுக்காக பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

### விற்பனைகள் வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் தேச நிர்மாண வரியும்)

வருவாய்கள், செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட முடியாததுள்ள சொத்துகள் அல்லது சேவை கொள்வனவொன்றின் மீது ஏற்பட்ட விற்பனைகள் வரிகள் தவிர விற்பனை வரித்தொகையினை கழித்து இனக்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விற்பனை வரியானது ஏற்புடையவாறு சொத்துச் செலவின் பாகமொன்றாக அல்லது செலவு விடையங்களின் பாகமொன்றாக அத்துடன் விற்பனை வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையுடன் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் கிடைக்கத்தக்க மற்றும் செலுத்தத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது. வரிவிதிப்பு அதிகாரிகள் தொடர்பில் அறவிடத்தக்க அல்லது செலுத்ததக்க விற்பனைகள் வரித்தொகையானது நிதியியல் நிலைமைக்கூற்றில் கிடைக்கத்தவைகளின் அல்லது செலுத்ததக்கவைகளின் பாகமொன்றாக உள்ளடக்கப்படுகின்றது.

## 2.5.5 நிதியியல் சாதனங்கள் – ஆரம்ப இனங்காணலும் அதனைத்தொடர்ந்த அளவீடும்

### 2.5.5.1 நிதியியல் சொத்துகள்

கம்பனியின் நித்ச்சொத்துக்கலானவை காசு, மற்றும் குறுகியகால வைப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தவை அத்துடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்தான நிலுவைத்தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கலையினுள் நிதியியல் சொத்துக்கலானவை இலாபம் அல்லது நட்டமூடாக நியாயப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள், கடன்கள் மற்றும் கிடைக்கத்தவை, முதிர்விற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனைக்கு கிடைக்கத்தக நிதியியல் சொத்துகள் அல்லது பொருத்தமான விதத்தில் விளைவுமிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறுதிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் சொத்துகளை வகைப்படுத்துவதனை ஆரம்ப இனங்கணுதலில் நிர்ணயிக்கின்றது.

இலாபம் அல்லது நட்டமூடாக நியாயப்பெறுமதியில் இல்லாத சொத்துகள் தொடர்பில் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல்களுடன் சேர்ந்தது அனைத்து நிதியியல் சொத்துகளும் நியாயப்பெறுமதியில் ஆரம்பத்தில் இனக்காணப்படுகின்றன.

சந்தையில் (கிரமமான வணிக வழிமுறை) ஒழுங்குவிதியினால் அல்லது சமவாயத்தினால் நிறுவப்படுகின்ற காலச் சட்டகம் ஒன்றினுள் சொத்துகளின் ஒப்படைப்பினை தேவைப்படுத்துகின்ற நிதியியல் சொத்துகளின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள், வணிக திகதியன்று அதாவது சொத்தினை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கம்பனி பொறுப்பேற்கின்ற திகதியன்று சந்தை அமைவிடத்தில் இனக்காணப்படுகின்றது.

### தொடர்கின்ற அளவீடுகள்

நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் மீது சார்துள்ள அவற்றின் அதனை தொடர்ந்த அளவீடானது பின்வருமாறு

### அ) கடன்களும் கிடைக்கத்தக்கவையும்

கடன்களும் கிடைக்கத்தக்கவையும் செயற்பாடுமிக்க சந்தை ஒன்றில் விலைகுறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். அத்தகைய நிதியியல் சொத்துகள் ஆரம்ப அளவீட்டின் பின்னர் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி மதிப்பிழப்பினை கழித்து பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையகப்படுத்தல் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் மிக முக்கிய பாகமொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது. விளைவு வட்டிவீத முறை பெறுமதிகுறைத்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பிழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் நிதிச்செலவுகளில் வருமானக் கூற்றில் இனக்காணப்படுகின்றன.

### இனங்காணாமை

நிதியியல் சொத்து ஒன்று (அல்லது பொருத்தமான விடத்து நிதியியல் சொத்தொன்றின் பாகமொன்று அல்லது அதனை ஒத்த நிதியியல் சொத்துகளின் குழும பாகம்) பின்வரும் சந்தர்ப்பங்களில் இனங்காணப்படுவதில்லை:

- சொத்தில் இருந்தான காசுப்பாச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்.
- “கடந்துசெல்லல்” ஒப்பந்தம் ஒன்றின் கீழ் முக்கிய தாமதம் இன்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான சொத்தில் இருந்து காசுப்பச்சல்களை பெறுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற காசுப்பாச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு ஒன்றினை ஊகித்துள்ள போது கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ளது; அத்துடன் ஒன்றில் (அ) சொத்தின் கணிசமாக அனைத்து இட நேர்வுகளையும் அத்துடன் கைமாறுகளையும கம்பனி மாற்றம் செய்து இருக்கின்றது (ஆ) சொத்தொன்றின் கணிசமாக அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி இடமாற்றவோ அன்றில் பிடித்துவைத்தில்லாமல், ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றம் செய்துள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ள போது அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றினை கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்தினது கணிசமான அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் மாற்றம் செய்தோ அன்றில் பிடித்து வைத்தோ அன்றி கட்டுப்படுத்தலினை மாற்றம் செய்தோ இல்லாத போது சொத்தானது கம்பனி அதில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது என்ற ரீதியில் இனம்காணப்படுகின்றது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் கம்பனி பிடித்துவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்றன.

மாற்றம் செய்யப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவினை பெற்றுக்கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்லும் தொகையின் குறைவான மட்டத்தில் அளவிடப்படுவதுடன் மீள்கொடுப்பனவிற்காக கம்பனி வேண்டப்படக்கூடிய ஆகக்கூடிய பிரதிபலன் தொகையிலும் அளவிடப்படுகின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### நிதியியல் சொத்துகளின் மதிப்பிழப்பு

நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துகளின் குழுமமொன்று, சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இடம்பெற்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக (ஏற்பட்ட "இழப்பு நிகழ்வு") மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்தின் அல்லது நிதிச்சொத்துக்களின் குழுமத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் மீது அவ்விழப்பு நிகழ்வு தாக்கமொன்றினைக் கொண்டுள்ளது என பொருன்மையான மதிப்பிழப்புச் சான்று காணப்படுமெனில், அதன் போது மாத்திரம் மதிப்பிழந்ததாக கருதப்படுகின்றது.

மதிப்பிழப்பு சான்றானது கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுமமொன்று குறிப்பிடத்தக்க நிதிக்கஸ்டத்தினை அனுபவிக்கின்ற, தவணை தவறுகின்ற அல்லது வட்டியினை அல்லது முதன்மை கொடுப்பனவுகளை தவணை தவறுகின்ற அல்லது கடமை தவறுகின்ற, அவர்கள் வங்குரோத்து அடைகின்ற அல்லது ஏதேனும் நிதியியல் மறுசீரமைப்பு நிலையடைகின்ற மற்றும் அடைகின்ற குறிகாட்டிகளையும் தவணை தவறுவதன் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவிடப்பட்ட வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது என்ற அவதானிக்கத்தக்க தரவுக்குறிக்காட்டிகள் காணப்படுகின்றவற்றை உள்ளடக்கலாம்.

### பெறுமதி குறைப்பில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்கள்

பெறுமதி குறைப்புச் செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களுக்காக கம்பனியானது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமுடைய அல்லது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமற்ற நிதியியல் சொத்துக்களுக்கான கூட்டான மதிப்பிழப்பு காணப்படுவதற்கு மெய்யான சான்றுதழ் உள்ளதா என்பதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட ரீதியாக மதிப்பிட்ட சொத்தொன்றுக்காக முக்கியமானதோ அல்லது முக்கியமற்றதோ மதிப்பிழப்பு மெய்யான சான்றொன்று காணப்படவில்லை என கம்பனி நிர்ணயிக்குமாயின் அது சொத்தினை அதனையொத்த கடன்இடர் பண்புகளுடன் கூடிய நிதிச்சொத்துக்களின் குழுமமொன்று உள்ளடக்குவதுடன் மதிப்பிழப்பிற்காக அவற்றை கூட்டாக மதிப்பீடு செய்கின்றது. மதிப்பிழப்பிற்காக தனியாக மதிப்பிழக்கப்பட்ட சொத்து மற்றும் மதிப்பிழப்பு நட்டத்திற்காக தொடர்ச்சியாக இனங்காணப்படவேண்டியவை மதிப்பிழப்பின் கூட்டான மதிப்பீடொன்றில் உள்ளடக்குவதில்லை.

மதிப்பிழப்பு நட்டமொன்று ஏற்பட்டு வருகின்றது என மெய்யான சான்றொன்று காணப்படுமாயின் நட்டத்தொகையானது சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான (இன்னமும் ஏற்பட்டிருக்காத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் நீங்கலாக) வேறுபாடாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகள் நிதியியல் சொத்தின் அடிப்படை விளைவுவட்டிவீதத்தில் கழிவுசெய்யப்படுகின்றன. கடனொன்று மாறுபடும் வட்டி வீதத்தினை கொண்டிருக்குமாயின், ஏதேனும் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவுவீதமானது நடைமுறை விளைவு வட்டிவீதமாகவிருக்கும்.

சொத்தொன்று கொண்டு செல்லும் தொகையானது ஏற்புவரம்பு கணக்கொன்றினை பயன்படுத்துவதன் ஊடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வட்டிவருமானமானது குறைக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகை மீது தொடர்ந்து திரட்டப்படுவதுடன் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினை பயன்படுத்தி திரட்டப்படுகின்றது. வட்டிவருமானமானது நிதி வருமானத்தின் பாகமொன்றாக வருமானக்கூற்றில் பதிவுசெய்யப்படுகின்றது. எதிர்கால கடன் அறவீட்டுக்கு ஐயமற்ற எதிர்பார்க்கையொன்று காணப்படாத போது கம்பனிக்கான அனைத்து பிணைய உறுதிகளும் தேறிவுள்ள அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள போது கடன்கள் இணையப்பெற்ற ஏற்புவரம்புகளுடன் சேர்த்து பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. தொடர்ந்து வருகின்ற ஆண்டொன்றில் மதிப்பிழப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வின் காரணமாக மதிப்பிடப்பட்ட மதிப்பிழப்பு அதிகரித்தல் அல்லது குறைவடைதல் தொகை இருப்பின், முன்னர் இனங்காணப்பட்ட மதிப்பிழப்பு நட்டமானது ஏற்புவரம்புக் கணக்கினை சரிசெய்வதன் மூலம் அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழிப்பொன்று பின்னர் மீள அறவிடப்படுமாயின், அறவீடானது வருமானக்கூற்றின் நிதிச்செலவுகளுக்கு வரவு வைக்கப்படுகின்றது.

### 2.5.5.2 நிதியியல் பொறுப்புகள்

கம்பனியின் நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை, தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவை, வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் வட்டியுடைய கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளானவை இலாபம் அல்லது நட்டம் ஊடாகநியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் பொறுப்புகள், கடன் மற்றும் கடனாக்கங்கள் அல்லது பொருத்தமானவாறு செயல்திறன்மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலினை அதன் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் இனங்காணப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் தொடர்பில் பெறுமதிக் குறைப்புச் செலவில் கொண்டு செல்லபடுகின்றன. இது நேரடியாக சாட்டத்தக்க செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப நியாயப் பெறுமதிக்கும் உத்தேசத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு தொழிற்படுத்தல் வாடகை வருமானத்தின் கூறொன்றாக உள்ளடக்கப்படுவதுடன் ஏற்புடைய காலப்பகுதி மீது நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

தொடாகின்ற அளவீடு

நிதியியல் பொறுப்புகளின் அளவிடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது.

### அ) கடன்களும் கடனாக்கங்களும்

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடனாக்கங்களும் விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைப்புச் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகைகளும் இழப்புகளும், பொறுப்புகள் இனங்காணாமையின் போது அத்துடன் விளைவு வட்டிவீத முறை பெறுமதி குறைப்புச் செயன்முறையினூடகவும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையேற்பின் மீதான ஏதேனும் கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றான கட்டங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகிறது. விளைவு வட்டிவீத பெறுமதி குறைத்தலானது வருமானக்கூற்றில் நிதிச்செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

### இனங்காணாமை

பொறுப்பின்கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்கின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதியியல் பொறுப்பொன்று இனங்காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளில் அதே கடன்வழங்குநரிடமிருந்து; பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக மாற்றியமைக்கின்ற போது அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் மூல பொறுப்பின் இனங்காணாமையொன்றாகவும் புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கொள்ளப்படுவதுடன்; தொடர்புடைய கொண்டு செல்லும் தொகைகளிலுள்ள வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது.

### 2.5.6 நியாயப் பெறுமதி அளவீடு

நியாயப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்கு முறையான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற அல்லது பொறுப்பொன்றின் மாற்றலுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். நியாயப் பெறுமதி அளவீடானது பின்வருவனவொன்றில் இடம்பெறுகின்ற சொத்தினை விற்பனை செய்வதற்கான அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கான கொடுக்கல்வாங்கல் முன் ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்:

- சொத்துக்கான அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை - அல்லது
- சொத்துக்கான அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து மிகவும் அனுகூலமான சந்தை

முதன்மை அல்லது மிக அனுகூலமான சந்தையானது கம்பனி அணுகத்தக்கதாக இருக்க வேண்டும். சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் நியாயப் பெறுமதியானது தமது அதிகூடிய பொருளாதார நலனுக்காக சந்தைப் பங்கேற்பாளர்கள் செயற்படுகின்றனர் என்பதனை ஊகிக்கின்ற சொத்தினை அல்லது பொறுப்பினை விலை குறிக்கின்றபோது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்துகின்ற ஊகங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிதியியல் அல்லாத சொத்தொன்றின் நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளர்ரொருவரின் இயலுமையினைக் கருத்திற் கொள்கின்றது.

சூழ்நிலைக்கு பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக நியாயப் பெறுமதியினை அளவிடுவதற்கு தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகள் பயன்பாட்டினை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை குறைகின்ற போதிய தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

நிதியியல் கூற்றுக்களில் நியாயப் பெறுமதி அளவிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் மொத்தமாக நியாயப் பெறுமதி அளவீடுகளுக்கு முக்கியமாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீட்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வருமாறு விவரிக்கப்படும் நியாயப்பெறுமதி படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- மட்டம் 1- ஒரே மாதியான சொத்துகளுக்கு அல்லது பொறுப்புகளுக்கு செயற்பாடுமிக்க சந்தைகளில் குறிக்கப்பட்ட (சீர்செய்யப்படாத) சந்தை விலைகள்
- மட்டம் 2 - நியாயப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்கின்ற குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கப்படுகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள்
- மட்டம் - 3 நியாயப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடானது நியாயப்பெறுமதி வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக அவதானிக்கமுடியதாகவுள்ள விலைமதிப்பீட்டு நுட்பங்கள், சொத்தின் அல்லது பொறுப்பின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே விளக்கப்பட்டவாறு நியாயப் பெறுமதி ஒழுங்குமுறை என்பவற்றின் அடிப்படையில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகுப்புகளை கம்பனி நிர்ணயிக்கின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### 2.5.7 பதிவேட்டுப் பொருட்கள்

பாவணைக்குதவாத மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டபின்னர் குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் விலைமதிப்பிடப்படுகின்றன. நிகரதேறத்தக்க பெறுமதி என்பது நிறைவு செய்வதற்கு மதிப்பிட்ட செலவு மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டு பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விலையாகும்.

பதிவேட்டுப் பொருட்களின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைகளுக்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன:

| | |
|---|---|
| திருத்தவேலைகளுக்கான நுகர் பொருட்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள் பொதுவான வன் பொருட்கள் | - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள் | - உண்மையான கொள்வனவுச் செலவில் |

### 2.5.8 ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், நாளாந்த நன்நிலைப்படுத்தல் செலவுகள் நீங்கலாக, ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வினையும் பெறுமதியில் ஒன்றுசேர்ந்த மதிப்பிழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய கிரயங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகத்தினை மாற்றீடு செய்கின்றபோது ஏற்படுகின்ற செலவு, இனங்காணுதல் மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமாயின், உள்ளடக்கப்படுகின்றது.

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது பொறுப்பேற்கப்பட்டுள்ள மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ள பணி மீது கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து தொகைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

காணியானது முடிவற்ற ஆயுளை கொண்டிருப்பதாக கருதப்படுகின்றமையினால் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. தேய்மானமானது பயன்பாட்டுக்கா கிடைக்கப்பெறுகின்ற திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற அத்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு ஒவ்வொரு சொத்தினதும் செலவினை ஒதுக்கீடு செய்வதற்காக நேர்கோட்டு முறை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதன் மீது சொத்தானது இனங்காணப்படாத திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

சொத்தினது எஞ்சியுள்ள பெறுமதிகள், பயன்பாடுமிக்க ஆயுட்காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வுசெய்யப்பட்டு ஏற்புடதாயின் சீர்செய்யப்படும்.

சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட மீளஅறவிடத்தக்க தொகையினை விட அது கொண்டுள்ள தொகை பெரிதாகவிருப்பின் சொத்து கொண்டுள்ள தொகையானது உடனடியாக பெறுமதி குறைக்கப்படும்.

கொண்டுள்ள தொகையுடன் பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் விற்பனைகள் மீதான வருவாய்களும் இழப்புகளும் நிர்ணயிக்கப்படுவதுடன் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.¡

### 2.5.9 அருவச் சொத்துக்கள்

#### அ) தொழில்முயற்சி வளத்திட்டமிடல் (நுசுP) முறைமையும் உரிமக் கட்டணங்களும்

கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் உரிமங்களுடன் தொடர்புடைய செலவுகளை உரிமக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. உரிமக் கட்டணங்கள் திரண்டபெறுமதிக்குறைப்பினை கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. பெறுமதிகுறைத்தலானது 5 வருடங்கள் கொண்ட அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது உரிமங்களின் செலவினை ஒதுக்கீடு செய்வதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

### 2.5.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் அறிந்த பணத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடருக்குட்படுகின்ற குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என வரையறை செய்யப்பட்டவையாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையுள்ள காசு, நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கியிலுள்ள வைப்புக்கள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைந்த அடிப்படை முதிர்ச்சிகளுடனான முதலீடுகளும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படுகின்றன.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### 2.5.11 நிதியமல்லாத சொத்துக்களின் மதிப்பிழப்பு

வரையறையற்ற பயன்பாடுமிக்க ஆயுட்காலமொன்றினைக் கொண்டுள்ள சொத்துக்கள் பெறுமதி குறைப்புக்கு உட்படுவதில்லை என்பதுடன் பெறுமதி குறைப்புக்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பிற்கு உட்படுகின்ற சொத்துக்கள் அவை கொண்டு செல்கின்ற தொகை அறவிடப்பட முடியாமலிருக்கலாம் என குறித்துக் காட்டுகின்ற சூழ்நிலைகளின் நிகழுகின்றபோது அல்லது மாற்றங்களின் போதுமதிப்பிழப்பிற்காக மீளாயப்படுகின்றன. பெறுமதி இழப்பு நட்டமொன்று சொத்தின் கொண்டு செல்லுகின்ற தொகை அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற தொகைக்காக பெறுமதி இழப்பொன்று இனங்காணப்படுகின்றது. மீளஅறவிடத்தக்க தொகையானது விற்பதற்கான செலவுகள் மற்றும் பயன்பாட்டுப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் நியாயப் பெறுமதியின் உயர்வானதாகும். மதிப்பிழத்தலினை கணிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்கள் ஆக்குறைந்த மட்டங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக வேறாக இனங்காணத்தக்க காசுப்பாய்ச்சல்கள் காணப்படுகின்றன (பணம் ஈட்டுகின்ற அலகுகள்).

### 2.5.12 ஏற்பாடுகள்

கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்குகின்ற வள வெளிப்பாய்ச்சலொன்று தேவைப்படும் என்ற நிகழ்வு காணப்படுகின்றவிடத்து மற்றும் கடப்பாட்டின் தொகை பற்றி நம்பத்தகுந்த மதிப்பீடொன்றினை மேற்கொள்ளக்கூடியதாகவிடத்து கடந்த காலத்தின் விளைவொன்றாக கம்பனியானது தற்கால கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டுள்ளபோது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடு சிலவற்றை அல்லது அனைத்தையும் மீள்நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கப்படுகின்றபோது மீள்நிரப்பலானது தனியான சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது ஆயினும் மீள்நிரப்பலானது தோற்றநிலையில் நிச்சயமானதாக இருக்கும்போது மாத்திரமாகும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புடைய செலவானது ஏதேனும் மீள்நிரப்பலினை கழித்து வருமானக்கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணத்தின் காலப்பெறுமதித் தாக்கம் முக்கியமானதாயின் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை ரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அத்துடன் பொருத்தமானவிடத்து, பொறுப்பிற்கான குறித்துரைத்த இடர்நேர்வுகளையும் கழிப்பதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கழிவுசெய்தல் பயன்படுத்துகின்றவிடத்து, காலப்போக்கின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பானது வட்டிச் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

### 2.6 ஊழியர் நலன்கள்

### அ) வறையரை செய்யப்பட்ட ஊழியர் நலன்கள் - பனிக்கொடை

கம்பனியானது ஒவ்வொரு ஆண்டும் 'எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை" இனைப்பைப்பயன்படுத்தி கணிப்பீடாளரின் ஆலோசனையுடன் வறையரைசெய்யப்பட்ட திட்டமொன்றான பணிக்கொடைக் கடப்பாட்டின் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய நலப்பெறுமதிகளை அளவிடுகின்றது. கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும், அதுதோன்றுகின்ற காலத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

#### கணிப்பீட்டு வாய்களையும் இழப்புகளையும் இனங்காணுதல்.

கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அவை தோன்றுகின்ற வருடத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

### ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள

கம்பனியானது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றினையும் தொழிற்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டமொன்றுக்கு செலுத்தத்தக்க பங்களிப்பானது ஊழியர்கள் மூலம் கம்பனிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான பங்கொன்றாகவுள்ளதுடன் "ஆளணிச் செலவுகள்" இன் கீழ் செலவொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள், பொறுப்பொன்றாகப் பதிவுசெய்யப்படுகின்றன.

கம்பனியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது:

#### ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்கலாக) முறையே 15மூ மற்றும் 10மூ இனை பங்களிக்கின்றன.

#### ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் மேலதிக நேரம் நீங்கலாக 3% இனை கம்பனி பங்களிக்கின்றது.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### இ) சிக்கன சங்க நிதியத்திற்கான பங்களிப்பு

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபன வரையறுக்கப்பட்ட சிக்கன சங்கமானது சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (23 (3) (அ) ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டதாகும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் ஊழியர்களுக்கான மருத்துவ நலத்திட்டமானது சிக்கனச் சங்கத்தினால் முகாமைசெய்யப்படுகின்றது. மருத்துவ நலன்களுக்காக சிக்கனச் சங்கத்திற்கான கம்பனியின் காலாண்டு அடிப்படை பங்களிப்பானது ஆண்டின்போது செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

### 2.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னும் அமுல்படுத்தப்படாத இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கம்

2017 மாச்சு 31 அறிக்கையிடும்; காலங்களுக்காக கட்டாயம் அல்லாத சில புதிய கணக்கீட்டு நியமங்களையும் தற்போது காணப்படுகின்ற நியமங்களுக்கான திருத்தங்களும் மேம்படுத்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் எவையும் கம்பனியினால் முன்கூட்டியே பின்பற்றப்படவில்லை.

### இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

2014 டிசெம்பரில், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமானது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் இறுதியிப் பதிப்பினை வெளியிட்டது. இது நிதியியல் சாதனங்கள் எதிர்வுகூறலின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிப்பதுடன் இலங்கை அறிக்கையிடல் நியமம் 39 நிதியியல் சாதனங்கள், இனங்காணுதல் மற்றும் அளவீடுகள் இனைமாற்றீடுசெய்கின்றது. நியாயமானது மதிப்பிழத்தலின் வகைப்படுத்தலுக்கான புதிய தேவைப்பாடுகளையும் அத்துடன் காப்பு கணக்கீட்டினையும் அறிமுகப்படுத்துகின்றது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 ஆனது அனுமதிக்கப்பட்ட முன்கூட்டிய பிரயோகத்துடன் 2018 சனவரி 1 முதல் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு நடைமுறைக்கு வரும் பின்னோக்கிய பிரயோகம் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பீட்டுத் தகவல்கள் கட்டாயமானதன்று. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இல் இருந்தான சாத்தியமான தாக்கத்தினை இன்னும் முகாமைத்துவம் மதிப்பிட வேண்டியுள்ளது.

### இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்.

இந்நியமத்தின் குறிக்கோள் வருமானத்தின் தன்மை, தொகை, காலம் மற்றும் நிச்சயமின்மை பற்றியும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தமொன்றிலிருந்து தோன்றுகின்ற காசுப்பாய்ச்சல் பற்றியும் நிதியியல் கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு பயன்மிக்க தகவல்களை அறிக்கையிடுவதற்கு நிறுவனமொன்று பிரயோகிக்கின்ற கோட்பாடுகளைத் தாபிப்பதாகும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 2018 சனவரி 1 முதல் அமுலில் இருக்கும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15இலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை முகாமைத்துவம் இன்னும் அளவிடவில்லை

### இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 குத்தகைகள்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம், 2016 சனவரியில் குத்தகைகளுக்கான கணக்கீட்டுக்காக இ.நி.அ.நி. 16 குத்தகைகள் என்ற வழங்குநருக்கான குத்தகைகளுக்காக கணக்கீட்டினை புதிய நியமம் கணிசமாக மாற்றவில்லை எவ்வாறாயினும், நோரொத்த பதிவழிப்பு- சொத்துக்களைப் பயன்படுத்தலுடன் குத்தகைப் பொறுப்புக்களாக தமது ஐந்தொகையில் அதிக குத்தகைகளை இனங்காண்பதற்கு குத்தகை எடுத்தவரை தேவைப்படுத்துவதில்லை. அனைத்து இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கும் குத்தகை எடுத்தவர்கள் தனி மாதிரியொன்றினை பிரயோகிக்கவேண்டும் ஆனால் 'குறுகிய கால" குத்தகைகளையும் 'குறைந்த பெறுமதி" சொத்துக்கள் குத்தகைகளையும் இனங்காணாததெரிவினை கொண்டிருப்பர். பொதுவாக, இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கான இலாப அல்லது நட்ட இனங்காணல் முறையானது இலாப அல்லது நட்டக் கூற்றில் வேறாக இனங்காணப்படுகின்ற வட்டி மற்றும் பெறுமானத் தேய்வுடன் இன்றைய நிதிக் குத்தகை கணக்கீட்டினை ஒத்ததாகவிருக்கும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16ஆனது 2019 சனவரி 1 அன்று அல்லது அதன்பின் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு செயற்பாடுடையதாகும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன்னர் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமம் 15இனை நிறுவனமொன்று பிரயோகிக்க வேண்டும். குத்தகைதாரவொருவர் முன்அன்று, முழுமையான முன்தேதியிடப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட முன்தேதியிடப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி நியமத்தினை பிரயோகிப்பதனை தெரிவு செய்யலாம்.

இ.நி.அ.நி. 16 இலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை முகாமைத்துவம் இன்னமும் கணிக்கவில்லை.

## நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்
**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### இ.க நி 07 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான திருத்தங்கள்

2016 செப்டெம்பரில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், நிதியியல் செயற்பாடுகளின் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தப்படும் நோக்கத்துடனும் அறிக்கையிடும் நிறுவனத்தின் நிலைமையினை பயன்பாட்டாளர்கள் சிறப்பாக புரிந்து கொள்வதற்கு உதவுவதற்கும் இ.க.நி 7 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கிற்கான திருத்தங்களை வெளியிட்டது. புதிய தேவைப்படுத்தல்களின் கீழ் காசுப்பாய்ச்சல் மற்றும் காசல்லா விடயங்களிலிருந்தான மாற்றங்கள் போன்ற நிதியிடல் செயற்பாடுகளின் (உதாரணம்: வெளிநாட்டு நாணய அசைவுகளின் காரணமாக வருவாய்கள் மற்றும் இழப்புக்கள்) விளைவொன்றாக தமது நிதியியல் பொறுப்புக்களிலுள்ள மாற்றங்களை நிறுவனங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

### சர்வதேச கணக்கீட்டு நியமம் 12 வருமான வரிகள் கீழுக்கான திருத்தங்கள்

2016 செப்டெம்பரில் இ.க.நி. 12இற்கான திருத்தங்களை வெளியிடுவததன் மூலம் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது கணக்கீட்டுக்காக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட ஆனால் வரி நோக்கங்களுக்காக செலவில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களின் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் கணக்கீட்டு விதத்தினை விளக்கியது. 2017 சனவரி 1 முதல் திருத்தம் செயலில் இருக்கும். கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் மீது திருத்தங்களைப் பின்பற்றுவது தாக்கங்களைக் கொண்டிருக்கும் என கம்பனி எதிர்பார்க்கவில்லை.

### 2.7.1 பங்குடமையாளர்கள் ஒப்பந்தம் மற்றும் பங்குவிற்பனை கொள்வனவு உடன்படிக்கை - பொதுப்பயன்பாட்டாளர் வசதிகள் காலாவதியாதல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை இந்தியக் கம்பனி பீஎல்சி மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆகியவற்றுக்கிடையிலான பங்குடமையாளர்கள் உடன்படிக்கையும் - பொதுப்பாயன்பாட்டாளர் வசதிகள், 2008 டிசெம்பர் 31 அன்று காலாவதியாகியிருந்தது. சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் மீளப்புதுப்பித்தல் அல்லது நீடித்தல் நிறைவுசெய்யப்படவில்லை என்பதுடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வருமானமும் செலவினங்களும் சொல்லப்பட்ட நியதிகளையும் கம்பனியின் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள அதனைத் தொடர்ந்த ஏதேனும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டதன் பின்னர் இந்நிதியியல் கூற்றுகளில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

## 2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 3. | **வருமானம்** | ரூபா | ரூபா |
| 3.1 | **செயன்முறைப்படுத்தல் வருமானம்** | | |
| | முனைய வருமானம் | 6,622,880,272 | 6,098,040,636 |
| | தொழிற்படுத்தல் இலாபம் | 2,958,442,733 | 2,695,361,782 |
| | மீள்நிரப்பத்தக்க கடன் வட்டி | 642,628,413 | 578,629,916 |
| | | 10,223,951,417 | 9,372,032,334 |
| | **சேவைகளை வழங்குதல்** | | |
| | போக்குவரத்து வருமானம் | 2,439,493,091 | 2,268,679,970 |
| | கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடு | - | 46,550,843 |
| | | 2,439,493,091 | 2,315,230,813 |
| | **மொத்த வருமானம்** | 12,663,444,509 | 11,687,263,147 |

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 4 | **ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்** | ரூபா | ரூபா |
| | அலுவலர் கடன் மற்றும் ஏனையவை மீதான வட்டி | 315,980,353 | 214,374,623 |
| | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மீதான வருவாய் | 51,245,219 | 8,312,102 |
| | வாடகை வருமானம் | 9,557,417 | 9,072,085 |
| | வெளியீடுகள் கட்டணங்கள் | 2,700,000 | 4,630,000 |
| | சில்லறை வருமானம் | 99,670,252 | 63,566,925 |
| | சுற்றுலா விடுதி வருமானம் | 882,205 | 667,200 |
| | மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு | 3,165,029 | 2,077,535 |
| | | 483,200,474 | 302,700,470 |

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 5. | **நிதி வருமானமும் செலவுகளும்** | ரூபா | ரூபா |
| | **நிதி வருமானம்** | | |
| 5.1 | மீள் கொள்வனவு மூதலீடுகள் மீதான வட்டி | 84,761,790 | 25,810,176 |
| | நிலையான வைப்பு முதலீடுகள் மீதான வட்டி | 5,608,006 | 6,503,996 |
| | | 90,369,796 | 32,314,172 |

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 5.2 | **நிதிச் செலவு** | ரூபா | ரூபா |
| | வங்கிக் கடன் வட்டி | 166,775,397 | 233,560,311 |
| | | 166,775,397 | 233,560,311 |

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 6. | **வரிக்கு முந்திய இலாபம்** | | |
| | **அறவிடுதல் /வரவு வைத்தலுக்கு பின்னர் குறிப்பிடப்பட்டது** | ரூபா | ரூபா |
| | **நேரடிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| | தனிப்பட்ட செலவு | 2,329,533,369 | 2,288,315,179 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 694,018,639 | 725,724,503 |
| | **நிருவாகச் செலவில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 5,322,273 | 1,166,634 |
| | பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் | 2,030,000 | 1,165,000 |
| | ஆளணிச் செலவு | 3,130,050,416 | 2,759,854,088 |
| | வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு ஆண்டுக்கான விதிப்பனவு | 204,224,090 | 179,691,609 |
| | கணக்காய்வுக் கட்டணம் - நடப்பு ஆண்டு | 1,766,371 | 1,310,000 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 106,921,418 | 99,179,320 |
| | ஆண்டுக்கான மதிப்புக் குறைப்பு விதிப்பனவு | 9,740,641 | 30,007,859 |
| | வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் மதிப்புக் குறைப்புக்கான ஒதுக்கீடுகள் | 11,645,362 | 30,681,810 |
| | பதிவேட்டுப்பொருள் மேலதிக ஏற்பாட்டின் திரும்பல் | (50,699,287) | - |

**7. வரிச் செலவுகள்**

2016 டிசம்பர் 31 மற்றும் 2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்கான வருமான tupச் செலவுகளில் பிரதான கூறுகள் பின்வருமாறு

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| 7.1 | **வருமான வரி கூற்று** | ரூபா | ரூபா |
| | **நடப்பு வருமான வரி** | | |
| | நடப்பு வரிச் செலவு | 182,283,884 | 213,260,299 |
| | முன்னைய ஆண்டு தொடர்பில் நடப்பு வரிகளின் குறைந்த/(மேலதிக) ஏற்பாடு | 45,781,512 | 16,124,288 |
| | **பிற்போடப்பட்ட வரி** | | |
| | பிற்போடப்பட்ட வரி விதிப்பு /(வரவு) (குறிப்பு 08) | 363,378,298 | 112,278,122 |
| | **நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட வருமான வரிச் செலவு/(வரவு)** | 591,443,694 | 341,662,709 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

7. வரிச்செலவுகள் (தொடர்ச்சி.....)

7.2 **2016 டிசம்பர் 31 இல் மற்றும் 2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்காக நியதிச் சட்ட வரி வீத்த்தினால் கணக்கீட்டு இலாபத்தின் வரிச் செலவுகள் மற்றும் உற்பத்திகளுக்கு இடையிலான இணக்கம் பின்வருமாறு**

| | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|
| வரிக்கு முன்னர் கணக்கீட்டு இலாபம் | 2,330,073,120 | 1,715,646,470 |
| ஒன்று சேர்கப்பட்ட அனுமதிக்கப்படாத விடயங்கள் | 1,277,272,984 | 1,163,452,486 |
| ஒன்று சேர்கப்பட்ட அனுமதிக்கப்படஂதக்க விடயங்கள் | (1,591,594,363) | (1,457,744,572) |
| | 2,015,751,741 | 1,421,354,384 |
| வட்டி வருமானம் | 406,350,149 | 351,081,689 |
| மொத்த நியதிச் சட்ட வருமானம் | 2,422,101,890 | 1,772,436,073 |
| கழிக்குக: பயன்படுத்தப்பட்ட முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புகள் | (847,735,662) | (620,352,625) |
| வரிவிதிக்கத்தக்க இலாபம் | 1,574,366,228 | 1,152,083,448 |
| வரிதிக்கத்தக்க வருமானத்திற்கான வருமான வரி | 182,283,884 | 115,208,345 |
| பகிரத்தக்க இலாபம் மீதான வரி | - | 98,051,954 |
| **நடப்பு வருமான வரிச் செலவுகள்** | 182,283,884 | 213,260,299 |

8. **பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்**

8.1 **விற்போடப்பட்ட வரி**

**பின்வருவனவற்றுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் வருமான வரி**

| | நிதியியல் நிலைக் கூற்று | | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | |
|---|---|---|---|---|---|---|
| | 2016<br>ரூபா | 2015<br>ரூபா | 2016<br>ரூபா | 2015<br>ரூபா | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
| **பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்** | 1,246,080,289 | 889,659,540 | 356,420,749 | 53,136,993 | | |
| வரி நோக்கங்களுக்கான மூலதன ஒதுக்கீடுகள் | 1,042,436 | 1,734,966 | (692,530) | (3,000,786) | - | - |
| அருவச் சொத்துகள் | | | | | - | - |
| **பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள்** | 1,247,122,725 | 891,394,506 | | | | |
| பொருட்பதிவேடுகள் | 18,183,253 | 19,554,580 | 1,371,327 | 265,825 | - | - |
| ஏற்பாடுகள் | 25,338,449 | 17,205,775 | (8,132,674) | (3,011,634) | 33,409,331 | 3,709,307 |
| வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் | 169,067,700 | 138,563,433 | (63,913,598) | (8,042,309) | - | - |
| வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் | 28,776,108 | 107,101,133 | 78,325,025 | 72,930,033 | - | - |
| | 241,365,510 | 282,424,921 | | | | |
| பிற்போடப்பட்ட வருமான வரி - வருமானம் | | | 363,378,298 | 112,278,122 | 33,409,331 | 3,709,307 |
| தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு/ (சொத்துகள்) | 1,005,757,215 | 608,969,585 | | | | |

8.2 விளைவு வட்டி வீத்தினை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி கணிக்கப்பட்டுள்ளது. வரிவிதிக்கத் தக்க வருமானத்தின் வேறுபட்ட மட்டங்களுக்கு பிரயோகிக்கப்பட்ட பல வரி விகிதங்களின் காரணமாக வீதமானது 10% இருந்து 13.70 % ஆக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பில் ரூபா 271,627,861 அதிகரித்தது.

9. **பங்கொன்றிற்கான உழைப்பு**

9.1 பங்குரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க காலத்திற்கான தேறிய இலாபத்தினால் பிரிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. காலத்தின் போதும் முன்னைய காலத்தின் போதும் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் நிறைவேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கையானது மிகை ஊதியம் வழங்கள் போன்ற வழங்கலின் நேரொத்த மாற்றம் ஒன்று இன்றி நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்கின்ற நிகழ்வுகளுக்காக சரி செய்யப்படுகின்றது.

9.2 பின்வருவன பங்கொன்றுக்கான உழைப்பினை கணிப்பதில் பயன்படுத்தப்படும் வருமான மற்றும் பங்குத் தரவுகளை பிரதிபலிக்கின்றன.

| | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|
| **தொகுதியாக பயன்படுத்தப்பட்ட தொகை** | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கான சாதாரண பங்கு உரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க தேறிய இலாபம் | 1,738,629,426 | 1,373,983,761 |
| **பகுதிவெண்ணாக பயன்படுத்தப்படும் சாதாரன பங்குகளின் எண்ணிக்கை:** | | |
| வழங்கலில் உள்ள சாதாரன பங்குகளின் நிறையேற்றப்பட்ட சாராசரி எண்ணிக்கை பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கு ஏற்புடையது | | |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | 750,000,000 | 750,000,000 |
| | 2.32 | 1.83 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

10. ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

10.1 மொத்த கொண்டு செல்லும் தொகைகள்

| கிரயத்தில் | 2016.01.01 அன்று மீதி ரூபா | சேர்தல்கள் ரூபா | அகற்றுதல்கள் ரூபா | 2016.12.31 அன்று மீதி ரூபா |
|---|---|---|---|---|
| நிரந்தரக் காணி | 4,472,982,899 | 24,018,764 | - | 4,497,001,663 |
| நிரந்தரக் கட்டடம் | 1,544,180,342 | 2,220,297 | - | 1,546,400,639 |
| களஞ்சியத் தாங்கி | 6,490,993,653 | - | - | 6,490,993,653 |
| மோட்டார் வாகனங்கள் | 1,211,160,119 | 101,043,398 | (90,363,088) | 1,221,840,429 |
| குழாய்த் தொகுதி | 7,386,343,576 | - | - | 7,386,343,576 |
| தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் | 1,979,027,186 | 90,080,734 | (1,898,793) | 2,067,209,127 |
| கணனிகள் | 159,569,210 | 6,082,067 | (1,979,320) | 163,671,957 |
| தனி இரட்டை நிலை இறக்கும் | 2,800,409,453 | - | - | 2,800,409,453 |
| பம்புகளும் நிலைத்துாண்களும் | 1,396,756,597 | 57,696,023 | - | 1,454,452,620 |
| பெறுமானம் தேயத்தக்க சொத்துகளின் | 27,441,423,035 | 281,141,284 | (94,241,201) | 27,628,323,11 |
| முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி | 165,273,617 | 632,270,251 | - | 797,543,868 |
| | 27,606,696,652 | 913,411,535 | (94,241,201) | 28,425,866,986 |

10.2 பெறுமானத்தேய்வு

| கிரயத்தில் | 2016.01.01 அன்று மீதி ரூபா | ஆண்டுக்கான விதிப்பனவு ரூபா | அகற்றல்கள் ரூபா | 2016.12.31 அன்று மீதி ரூபா |
|---|---|---|---|---|
| நிரந்தரக் கட்டடம் | 490,382,033 | 44,156,309 | | 534,538,342 |
| களஞ்சியத் தாங்கி | 2,116,074,608 | 158,436,677 | | 2,274,511,285 |
| மோட்டார் வாகனங்கள் | 1,189,047,766 | 17,715,252 | | 1,116,399,930 |
| குழாய்த் தொகுதி | 2,381,040,444 | 273,075,707 | (90,363,088) | 2,654,116,151 |
| தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் | 1,736,947,951 | 54,704,511 | | 1,789,779,856 |
| கணனிகள் | 142,226,390 | 8,060,598 | (1,872,606) | 148,307,668 |
